பொன்னி

118

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
APR 1954
MADRAS

உலக அரங்கில் ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் சிந்தனை அரங்கிலே நடம்பயிலும் சிறுகதைகள், உலக அரங்கிலே உயிர்பெற்று உலவுகின்றன. ஒப்பற்ற கருத்துக் களஞ்சியம். சிந்தனைச் செல்வம்.

★

கடல் முத்து ரூ. 1—0—0

இலக்கியக் கடலிலே மூழ்கி எடுத்துக் கோத்த உன்னத கதை முத்துக்களை நண்பர் ஆறுமுகம் மக்களுக்கு வழங்கியுள்ளார். கடல் முத்தால் கிராமிய உலகம் ஒளிபெறுகிறது. உள்ளமும் உணர்வும் ஒருங்கே இசைவுறும் கதைக் காவியம்.

★

நினைவுச் சின்னம் ரூ. 1—0—0

தோழர் இளமைப்பித்தனின் மூன்றாவது சிறுகதைத் தொகுதி இது. கருத்தாழங் கொழிக்கும் கலைச்சின்னம்; தமிழகம் கண்ட தணியாத கலையார்வத்தின் நினைவுச் சின்னம்.

★

தபாலாபீஸ் விநோதங்கள் அணா 8

தபாபீலாஸ் சகல முனைகளும் குவியும் கூடம். அங்கு நடக்கும் திருக்கூத்துக்கள் ஒன்றல்ல, ஆயிரம். அதன் இனிய படப் பிடிப்புத்தான் நண்பர் க. சண்முகசுந்தரம் தீட்டியுள்ள கட்டுரைகள். இனிய சுவை செறிந்த ஓவியம்!

★

நான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் தருவிப்போருக்கு
— அஞ்சற் செலவின்றி அனுப்பி வைக்கப்பெறும். —

★

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு, : : சென்னை—1.

அச்சகத்தார் அனைவருக்கும்

விண்ணப்பம்

தமிழ் எழுத்துக்களைப் புதுப்பிக்கும்போது எங்கள் "பாரதி" "வள்ளுவர்" தமிழ் எழுத்து ரகங்கள் அடங்கிய கேட்லாக்கைப் பார்வையிடும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மேல்நாட்டினர் ஆங்கிலத்தை பல வடிவங்களில் உருவாக்கி அமைத்துள்ளபடி நம் செந்தமிழையும் நாங்கள் பல வடிவங்களில் உருவாக்கி வருகிறோம்.

இவை ஒவ்வொரு அச்சகத்தாருக்கும் இன்றியமையாதென உறுதியாகக் கூறுகிறோம். மேலும் தயாரிக்கும் உரிமை ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக்கின்றது.

தி மதருஸ் டைப் பவுண்டரி

38, ஜோன்ஸ் தெரு :: மதருஸ்-1

230 Persons have been awarded Prizes in Competition No. 11.

Viz., 1st Prize, 195-2nd Prize, 8-3rd Prize 26 and Consolation Prize 1. For Full particulars: please see "Sunbeam" dated 25-3-1954.

RAISING COMPETITIONS

KEY'S. NO 11 * 18 TO 33 = 107

33	22	26	21
19	28	24	31
20	27	23	32
30	25	29	18

We hereby certify that the above is the solution in original deposited with us by Raising Competitions No. 11 on 9-2-54 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V Ramamulay
-16.3.54
Agent, Madras

ரிஜிஸ்டர்ட் நெ. 624. போட்டி நெ. 13.

ரூ. 25,000

பரிசு பெறுக.

எமது ஸீலிடப்பட்ட சரியான விடை சென்னை மெஸர்ஸ் பிரீமியர் பாங்க் ஆப் இந்தியா லிமிடெட்டில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர்களது அத்தாட்சியுடன் பிரசுரிக்கப்படும் எமது ஸீலிட்ட விடைக்கு வரிக்கு வரி எழுத்துக்கு எழுத்து முற்றிலும் சரியான விடைக்கு **முதல் பரிசு ரூ. 12,000;** முதலிரண்டு வரி சரியான விடைக்கு 2-ம் பரிசு ரூ. 7000; முதல் வரி சரியான விடைக்கு 3-ம் பரிசு ரூ. 3000. விசேஷப் பரிசுகள் ரூ. 3,000.

முடிவு தேதி 12–4–54 **விடை 27–4–54**

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1–0–0.
ஆறு கூபன்களுக்கு ரூ. 5–0–0,

விடைகள் கண்டு பிடிக்கும் விதம்:– 20 முதல் 35 வரையுள்ள எண்களைப் பக்கத்திலிருக்கும் கட்டங்களில் பூர்த்தி செய்க.

110

இடமிருந்து வலமாகவுள்ள வரிசைகளையோ, மேலிருந்து கீழாகவுள்ள வரிசைகளையோ, சதுரத்தின் மூலைகளுக்கு குறுக்காகவோ எந்த வரிசையைக் கூட்டினாலும் மொத்தம் 110 தான் வரவேண்டும். ஒரு எண்ணை ஒரே முறைதான் உபயோகிக்கலாம், சாதாரண காகிதத்தில் எத்தனை விடைகள் வேண்டுமானாலும் எழுதலாம். ஒவ்வொரு விடைக்கும் அடியில் அவரவர் பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி, கட்டணத்தையும் கிராஸ் செய்த இந்திய போஸ்டல் ஆர்டராகவோ, மணியார்டராகவோ அனுப்பவும். மணியார்டர் பாரத்தில் கூப்பன்களில் அவரவர் பெயர் விலாசத்தை எழுதவேண்டும். விடை கூப்பன்களுடன் மணியார்டர் ரசீதை அனுப்பவும். வெளி நாட்டிலிருந்து அனுப்புவோர் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டராக வாங்கி அனுப்பவேண்டும். பரிசுத் தொகைகள் வசூலுக்குத் தக்கபடி மாறும். எல்லா விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்துவதுமாகும். விடை வேண்டுவோர் 4 அணா தபால் ஸ்டாம்பு அனுப்பினால் விடை தபாலில் அனுப்பப்படும். எமது விதிகளையும் நிபந்தனைகளையும் நன்கு அறிந்தவர்களே போட்டியில் கலந்துகொள்ள வேண்டும்.

விடைகளையனுப்பும் விலாசம்:—

The Raising Competitions No. 13

28, (P) Thandavaraya Gramani Street, Madras-21.

ஆட்சிப் பொறுப்பேற்கும் அமைச்சர் அவர்களே!

தாங்கள்,

மக்களின் பாதுகாப்பிற் காகப் படைபலம் படைத் திடுக!

பண்பட்ட குடிமக்களைப் படைக்கும் நெறிகாண்க!

வறுமை அணுகாது மக் கள்வாழ; உண்ண, உடுக்க, உறைய; இத்தனைக்கும் ஏற்றன புரிக!

நல்லன நாடும் அமைச்சர் களை உடன் அமைத்துக் கொள்க!

மக்கள் மனம்விட்டகலா மதிநலவாதிகள் (வேற்று நாட்டாரேனும்) நட்பைப் பெற முயல்க!

நாட்டைக் காக்கும் நல் லரண்களானவற்றைப் போற்றுக!

இத்துணையும் ஏற் றருள்க! (தொடரும்)

—வள்ளுவர்

பொருளடக்கம்

மலர் 8	ஏப்ரல் 1, 1954.	இதழ் 1

திருவள்ளுவர் ஆண்டு 1985
பங்குனித் திங்கள் 19-ம் நாள்

ஒற்றைவரி ஓவியம் ... 4
தலையங்கம் ... 5
"வாழ்த்தும் வரவேற்பும்" ... 7
பொன்னி நல்லாய்! ... 9
சொல் பரிதி! ... 10
அந்த நாள்! ... 12
செய்தித் திரட்டு ... 16
கல்லாதார்! ... 17
விநோத மண முறைகள் ... 19
எது அறிவு? ... 23
நம்மைச் சுற்றிலும் ... 25
குரல்கள் ... 30
இலக்கியச் செல்வங்கள் ... 33
மாறுதல் ... 38
புனலாடல் ... 55
மூடுபனி ... 57

★

ஒற்றைவரி ஓவியம்: தயிர்க்காரி

செந்தமிழே! உயிரே!! நறுந்தேனே!!!
செயலினை மூச்சினை யுனக்களித்தேனே!

—புரட்சிக் கவிஞர்

இன்று ....

பொன்னி உங்கள் பொன்மலர்க் கரங்களிலே; புதுமை எழிலொடு புன்னகை புரிகின்றாள். கையிலேந்தியதும் மெய்யிலே ஒரு சிலுசிலுப்பு; கருத்திலே ஒரு புத்துணர்ச்சி; உள்ளத்திலே ஓர் உவகை; உதட்டிலே புன்னகை; இத்தனையும் ஏற்படக் காண்கிறோம்! ....

பொன்னி! புறப்பட்டுவிட்டாள்! ஆம், வற்றாத ஆறுகள் வளங்குன்றா மலைகள், முத்தெடுக்கும் கடல்கள், இத்தனையும் சூழ; கரும்பும் வாழையும், கமுகும் தென்னையும், நெல்லும் பிறவும் அள்ளிக்கொடுக்கும் தமிழகத்தை நோக்கி.

அன்னையாய் நின்று அருந்தமிழ் நாட்டிற்கு எந்நிலை தன்னிலும்; தண்ணளி சுரந்து தாய்ப்பாலூட்டித் தகவுடன் காக்கும் பொன்னி (காவிரி)யாக; தாயகத்தைச் சுற்றித் தவழ்ந்து ஆடியும் பாடியும் உங்கள் அகமெலாம் மலர வைக்கப்போகிறாள்.

கலைஞர்கள் அறிஞர்கள் கவிஞர்கள் நிறைந்த நாட்டிலே தோன்றும் கருத்துக் குவியல்களிடையே வேறுபாடு தோன்றாதிருக்கக் காரணமில்லை; நியாயமுமாகாது. அரசியல் சமுதாயம் இவைபற்றிய கருத்துக் குவியல்களுக்கெல்லாம் கட்டளைக்கல் (உறைகல்)லாக நின்று; நம் நாட்டிற்கு ஏற்றதைப் போற்றுவாள்; எடுத்தும் கூறுவாள்! முன்னேற்ற வானிலே முழுமதியாகத் திகழ்வாள்!

கல்தோன்றி மண்தோன்ருக் காலத்தே முன்தோன்றிய பழந்தமிழ்ப் பண்பாட்டை, அவற்றை ஏற்று இலங்கும் பண்பட்ட இலக்கியச் செல்வங்களைப் பழுதற்ற சொல்லோவியங்களை உங்கள் பார்வைக்குக் கொண்டுவந்தளிப்பாள்!

இயல் இசை நாடகத்தமிழ் இயக்கங் காண்பதிலே; இனஎழுச்சி எண்ணங்கள் ஏற்றம் பெறுவதிலே; என்றும் அயராது நின்று பணியாற்றுவாள். புதிய பாதையிலே கதை, கவிதை, கட்டுரைகளைத் தந்து, விஞ்ஞானத்தை விளக்கி, புதுமை இலக்கியத்தைப் படைப்பாள்.

இனத்தின் முன்னேற்றத்திற்கு; இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு; குறிப்பாக இந்த நாட்டு மொழியின் முன்னேற்றத்திற்குத் தடையாயிருக்கும் எவற்றையும் தகர்த்தெறியத் தயங்காள் நமது பொன்னி!

இடைக்காலத்தே ....

வற்ருத பொன்னி! வளமிகுந்த பொன்னி!! உற்ருர்க்கும் மற்ருேர்க்கும் உரமூட்டி வளர்த்த பொன்னியை "நீர்மிகிற் சிறையுமில்லை" என்பதறியார் சிலர் அணை போட்டு அடைக்கத் தொடங்கினர்; மக்கள் ஆர்வமறியார் அவர்,

இன்று ....

அணையை யுடைத்து, கட்டைக் குலைத்து, இருந்தமிழே! என்னருமைத் தமிழகமே!! அன்னைத் திருநாடே!!! நிலம் திருத்தி வளன் சுரக்க வந்துவிட்டேன்! வாருங்கள்! வாருங்கள்!! என்று வரவேற்கின்ருள் பொன்னி. தமிழகம் தன்னை வரவேற்கும்; தமிழ் மக்கள் தன்னை வரவேற்பர் என்ற தளராத நம்பிக்கையால் திருவிடத்தில் பவனி வரத் தொடங்கிவிட்டாள். தான் பெற்ற தவக்குழந்தையைப் பின் யார்தான் வரவேற்பர்.

தாயகம் வரவேற்கும் என்ற தளராத நம்பிக்கையுண்டு. எனவே, **வருக! பொன்னி வளர்க!! பொன்னி வாழ்க!!! பொன்னி** என வாழ்த்துகின்ருேம் மக்கள் சார்பில்.

வணக்கம்.

'வாழ்த்தும் வரவேற்பும்'

"முற்போக்குக் கருத்துகளை, கதை, கவிதை, கட்டுரை வடிவிலே நமக்கெல்லாம் வழங்கிவந்த பொன்னி இதழ் மீண்டும் மலர இருப்பது கேட்டு மகிழ்கிறேன். இதழ் திராவிட முன்னேற்றக் கழகத்துக்குத் துணை நின்று பணியாற்றும் என்று அறிகிறேன். எனவே, தி. மு. கழகத் தோழர்களின் பேராதரவைப் பெறும் உரிமையைப் 'பொன்னி' பெறுகிறது. பொன்னி பொலிவுடன் உலவும் நாளை வரவேற்கிறேன்".

—அண்ணாதுரை.

"பொன்னி புதிய பொலிவு பெறுகிறாள் என்று கேட்டேன். பூரித்தேன். வண்ண ஓவியங்களையும், எண்ணக் குவியல்களையும் சுமந்து வந்து தமிழகத்தை வளப்படுத்திய பொன்னி, மீண்டும் கொள்கை முழக்கம் செய்யக் குதித்தாடி வருகிறாள் என்ற செய்தி எனக்கு மட்டுமல்ல; தமிழகத்திற்கே செந்தேன் போன்றதாகும். வாழ்க பொன்னி!

— மு. கருணாநிதி.

"பொன்னியின் பவனி மீண்டும் தொடங்குவது அறிந்தேன்; மகிழ்ந்தேன். மாணவப் பருவத்தில், எங்கள் உள்ளங்களையெல்லாம் கவர்ந்த ஏடு, பொன்னி. இடையில் அதன் ஒலியினைக் கேட்கும் வாய்ப்பில்லை, திராவிடத்துக்கு. இனி, அக்குறை தீருமென நம்புகிறேன். ஆரம்பத்தில் தொட்ட கொள்கைக்காகவே, பொன்னி போராடும் என்று எதிர்பார்க்கிறேன். வளர்க பொன்னி! மலர்க தமிழ் மணம்!!"

— அரங்கண்ணல்.

"பொன்னி வருகை கேட்டுப் பூரிப்படைகின்றோம். வளமார் திராவிட மக்கள் பொன்னியை மகிழ்வோடு வரவேற்று ஆதரிப்பார்கள் என்று பூரணமாக நம்புகின்றோம். பொன்னி சமூக அரசியல் பொருளாதார விடுதலைக்குப் பணியாற்றி, பகுத்தறிவுக் கொள்கைகள் நாட்டில் பரவ நற்றொண்டு புரிய வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம். பொன்னி நல்லறிஞர்களுடைய சிறந்த அறிவுக் கட்டுரைகளையும், பெண்ணுரிமை, இசை, இயல், நாடகம், மறுமலர்ச்சி, விஞ்ஞானம் ஆகிய புத்துலகக் கருத்துக்களையும் தாங்கித் திங்கள் இருமுறை திராவிடமெங்கும் பவனி வருவாள் — பொன்னி ஏடு பொன்னொளி வீசி வருக! பொன்னி வாழ்க! வளர்க!!

— அ. பொன்னம்பலம்.

பொன்னி மீண்டும் வெளிவருகிறது என்பதறிந்து பூரிப்படைகின்றேன். நாட்டு மக்கள் நலங்கருதி நன்முறையில் உழைக்கும் என்று நம்புவதோடு; வளர்க பொன்னி! என வாழ்த்தும் கூறுகின்றேன்.

—எஸ். சுயம்பிரகாசம்
சென்னை மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்.

புதிய அமைச்சர்களைப் பொறுக்கிக் கொண்டிருக்கும் நேரம்; புதுச்சேரியில் சுதந்திர தாகம் பொங்கிக் கொண்டிருக்கும் காலம்; இதற்கிடையில் பொன்னியும் புதுமலர்ச்சியுடன் புறப்படுகின்றாள் என்பதறிந்து அகமிகமகிழ்கின்றேன்.

பொன்னி இந்நாட்டு மக்கள் புத்துணர்ச்சி பெற, எல்லா வகையிலும் துணை புரிவாள் என நம்புகின்றேன். வருக பொன்னி! வாழ்க பொன்னி!! என வரவேற்பும் வாழ்த்தும் கூறுகின்றேன்.

— எஸ். இராமலிங்கம்,
சென்னை மாநில ஆட்சிக் குழு
உறுப்பினர் (M. L. A.)

'பொன்னி' முன்னேற்ற இலக்கிய இதழாக மாதமிருமுறை மலர்வாள் என்பது கேட்டுப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

பொன்னி வளரப் பொதுமக்கள் ஆதரவு தருவர் எனவும் நம்புகின்றேன்.

வளர்க பொன்னி! வாழ்க பொன்னியுடையார்!!

—ந. சுந்தரராசனார்
தலைமைத் தமிழாசிரியர்
மிக்கேல் உயர்நிலைப்பள்ளி, கோவை.

பொன்னி நல்லாய்!

"சிலம்பின் செல்வன்"

பூத்த மலர் முகமுடையாய்!
புதுமை தரும் எழிலுடையாய்!!
பொன்னி நல்லாய்
மாத்தமிழர் உணர்வெல்லாம்
மரபுநெறி துறையெல்லாம்
மனத்துட் கொண்டே
காத்தனை நீ தமிழினத்தை
என்று யான் பிறர்கூறக்
காதிற் கேட்டு
காத்திருந்தேன் இதுகாறும்
கண்திறக்கு மறிவொளியே!
கடிதின் வந்தேன்.

ஏத்திபல புகழ்கின்ற
ஏந்தல்நீர் என்பால்தான்
என்ன கண்டீர்!
போற்றுவதற் குரியனவென்?
போற்றிடும்நீ வீர்யாரோ?
புகலு வீரே!
சாற்றிடுவேன் நங்காய்கேள்
தமிழினத்தான் என்பேர்தான்
தக்க வாறு
போற்றிடுவேன் புகழ்ச்சியில்லை
புதுமையொளிர் காவியமே!
பொன்னி நல்லாய்

திருவிடத்தார் மொழிநலத்தின்
திறங்காட்டு கின்றாய்!
தீந்தமிழர் பண்பாட்டைத்
தெளிவுறுத்துகின்றாய்!
உருவளித்து இலக்கியமும்
இசையினையும் தெளித்தாய்!
ஓவியத்தின் உயர்சிறப்பை
உள்ளபடி தெரித்தாய்!
பெருமையுற நாடகத்தின்
பேரியலைக் கொண்டாய்!
பேராண்மை காதலிதெம்
பெற்றியெனத் தெரித்தாய்!
அருமையுறு கவிதைகளை
அள்ளியள்ளித் தந்தாய்!
ஆதலினால் காணுதற்கவாக்
கொண்டோம் அறிவாய்!



சொல் பரிதி

புதுமைவாணன்.

வஞ்சகர் மிஞ்சிய வையத்தை — கொடும்
வறுமை மிகுந்த உலகத்தை — கொல்லும்
பஞ்சம் மலிந்த புவனத்தை — தினம்
பார்த்துச் சிரிக்கும் பரிதியே! — உந்தன்
செஞ்சுடர் செல்லு மிடமெல்லாம் — எழில்
சிந்திடச் செய்கிருய்! ஆயினும் — மக்கள்
நெஞ்சின் மடமை இருளினை — உன்ஞல்
நீக்க முடியாத தென்னவோ?

மேகத் திரையைக் கிழிக்கிருய் — ஒளி
மேவிட வானில் விழிக்கிருய் — அதி
வேகத்தில் நாளைக் கழிக்கிருய் — சுடர்
வீசிஎம் சோர்வை ஒழிக்கிருய் — பெரும்
சாகர நீ ருண்டு மக்களின் — நலன்
தாங்கியே மாமழை பெய்கிருய் — பகல்
ஏகவும் தோன்றவும் செய்கிருய் — உந்தன்
இலட்சிய மென்னவோ? இயம்புவாய்!

பூங்காவில் உன்கதிர் பெய்கிறாய் — மலர்
பூத்துச் சொரிந்திடச் செய்கிறாய் — புவி
தூங்காது தட்டி எழுப் புறாய் — மனத்
துன்பம் ஒழிக்கிறாய், தூண்டுறாய் — உடல்
தாங்காது வெயில் பரப்புறாய் — எம்மை
தாக்குறாய், துக்கம் நிரப்புறாய் — மணம்
ஓங்கிடும் பூக்களை வாட்டுறாய் — உந்தன்
உறுதொழில் என்னவோ? கூறுவாய்!

பாரில் வளத்தை விதைக்கிறாய் — தினம்
பாட்டாளி தம்மை வதைக்கிறாய் — நெஞ்சில்
சீரிய இன்பம் புதைக்கிறாய் — இருள்
சேர்க்கும் முகிலை உதைக்கிறாய் — சுகம்
கோரிடும் ஏழைய ருதிரத்தை — செல்வர்
குடித்திடல் போன்றெம் வியர்வையை — புவி
வேரினில் சிந்தச் செய்கிறாய் — உந்தன்
விசித்திர சக்தியை விளக்குவாய்!

பொன்னி வெளியீடு—5

கம்பன் கெடுத்த காவியம்

மு. அண்ணாமலை

கம்ப ராமாயணத்திலே கண்டனத்துக்குரிய பகுதிகள் எத்தனை எத்தனையோ உண்டு. அவற்றில் சிலவற்றினைத் தக்க மேற்கோள்களுடன் ஆராய்ச்சி வடிவில் இப் புத்தகத்தில் தந்திருக்கிறார் ஆசிரியர். அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே மிகக் குறைந்த விலையில் தந்திருக்கின்றோம்.

விலை அணா 4

வணிகர்கட்குக் கழிவு தரப்படும். முன்பணம் அனுப்புவோர்க்கும் ரூ. 5-க்கு மேற்பட்டு வாங்குபவர்கட்கும் அனுப்பும் செலவு இலவசம். வி. பி. செலவு தனி. தனிப் பிரதி வேண்டுவோர் ஐந்தணா தபால்தலை அனுப்பவேண்டும்.

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு சென்னை—1.

அந்த நாள்

"சிலம்பின் செல்வன்"

நம் நாட்டு மறவர் கூட்டத்தைப் பார்த்து "காட்டு மிராண்டிகள்" என்றாரே, ஒரு கனவான்! அவரைக் கண்ணால் காண நேர்ந்த போது; அவரது கருத்தற்ற சொற்களைக் காதிலே கேட்டபோது; நெஞ்சம் குமுறியது; நிலை தடுமாறியது; நேர்மையிலார் நிலைகண்டு நினைவு சுழன்றது.

கங்கையையும் கடாரத்தையும் கட்டியாண்ட காலம்; கனகவிசயர் தலையிலே கல் சுமத்திய ஆண்டு; எங்கோ விருக்கும் இமயத்திலே எம் தமிழ்நாட்டுப் பொதியிலே செந்தமிழ்க் கொடி பறந்த அந்த நாள் என்னை அழைத்துப் பின் னோக்கிச் சென்றது.

அன்று! வெஞ்சமரிலே வெற்றியைத்தவிர வேறொன்றுமறியா வன் செந்தமிழ் நாட்டான், அவன் வீரத்தைக் குறைகூறியதற்காக வேற்று நாட்டிலே புகுந்து வெஞ்சமர் புரிந்து வெற்றிக்கொடி நாட்டிய வீர பரம்பரையினராகிய நாம்தானா! இன்று, 'காட்டுமிராண்டிகள்' என்று நம் நாட்டிலே புகுந்து கூறவும் கேட்டுக்கொண்டிருந்தோம் என்றெண்ணினேன். செந்தமிழ் நாட்டான் மானம் சீறற் காற்றில் சிரிக்கடிக்கப்பட்டதே என்று சிந்தை நொந்தேன்.

இந்த நேரத்திலே இளங்கோவும் செங்குட்டுவனும் என்முன்னே தோன்றினர், புன்னகை புரிந்தனர்; என்ன புதுமை என்றேன்.

எடுத்து நீட்டினர் சிலப்பதிகாரத்தை; இரு கை நீட்டி ஏற்றேன். புரட்டினேன் பக்கம் பக்கமாக; புரட்சிப் பாதையில் சென்ற புதிய உயிரோவியங்களாக என்முன் காட்சியளித்தனர்.

*　　　*　　　*

''விதியை மதியால் ஏன் வெல்ல முடியாது; விதி! விதி!! என்றுகூறி மக்களை மதியிழக்கச் செய்யும் வீணர்களுக்குப் புதுப்பாடம் புகட்டுகின்றேன்.''

—இளங்கோவடிகள்

''நீதியைத் துறந்தேன்! நேர்மையை இழந்தேன். அநீதிக்கு ஆட்சிப்பீடம் அளித்து விட்டேன்; இனி எனக்கு அரச பதவி வேண்டாம்; மண்ணுள வேண்டாம்; மடிகின்றேன்.''

—பாண்டியன்

''ஆரியர் அளித்த விருந்திலே பேரிகை கொட்டிய அற்பர்களே! பாரும்! உமது பரிதாபக் காட்சியை. கங்கைக்கரை, காவிரிக்கரையை வென்றுவிடும் என்று வீண் கனவு கண்டீரோ! கங்கைக்கரை காவிரிக்கரையை வென்றிருக்கலாம்; கமண்டலமும் கையுமாக வந்திருந்தால்—நெற்றியிலே நீறும் நெஞ்சிலே நூலுமாக வந்திருந்தால்—புத்தியற்றவர்களே! புல்லேந்திய கரங்கள் வாளேந்திப் புறப்பட்டனவோ!

—செங்குட்டுவன்

''ஆய்ந்து பார்க்கும் அறிவற்ற பாண்டி நாட்டரசே! காற்சிலம்பைக் கவரும்பொருட்டு, என்கணவனைக் கள்வனாக்கிய காவலனே!! காவலன் அவையிலே காரிகை புகுந்து கட்டுரைக்கின்றாளே என்ன காரணம் என்றெண்ணுகின்றீரா? இதோ காணும்!

—கண்ணகி

எண்ணச் சுழல்களிடையே நண்பர் எழுதுகோலும் தாளும் எடுத்து நீட்டினார். கதையமைப்பும் வசனமும் கொடுத்தேன்! கலைஞர்கள் ஏற்பர் என்ற காரணத்தால்.

நாடகவுறுப்பினர்கள் :

இமயவரம்பன்	...	சேரநாட்டு மன்னன்
நற்சோணை	...	இமயவரம்பன் மனைவி
செங்குட்டுவன், இளங்கோ	...	இமயவரம்பன் மக்கள்
வில்லவன்கோதை	...	படைத்தலைவன்
அழும்பில்வேள்	...	முதலமைச்சர்
நிமித்திகன்	...	குறிகூறுவோன்

காட்சி 1

[இடம் :— சேரன் கலைமன்றம். "நீத்தார் நினைவு நாள்" விழா நிகழ்ச்சியோடு நாடகம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. செங்குட்டுவன் இளங்கோவடிகள் முதலியோர் அவையில் வீற்றிருக்கின்றனர். வில்லவன் கோதை மேடைப்பேச்சிலே....]

வில்ல :—எங்கோமகளைக் கங்கை நீராட்டிச் சிங்கமென வீற்றிருக்கும் சேர நாட்டு வேந்தர் அவர்களே! எங்நாட்டிற்கும் மன்னராம் பேறு பெற்ற அடிகளார் அவர்களே! அமைச்சர்களே! புலவர் பெருமக்களே! வணக்கம். அவையேறி சொல்லாற்றும் தகுதி எமக்களித்த அரசர் பெருந்தகையின் பெருங் குணத்தைப் பெரிதும் போற்றுகின்றேன். பாவலரும் நாவலரும் வீற்றிருக்க, படைத்தலைவன் முன்னுரையாற்றப் பணிக்கப்பட்டேன், என்றால்; அதற்கு என்னபொருள்; தனி மொழி, செம்மொழி உயர் தனிச் செம்மொழியாம் அன்னைத் தமிழ் மொழி; ஆரியர் மொழிபோல் ஓரினத்திற்கே உரிமையாக்கப்படாமல், நாட்டார் அனைவர்க்கும் உரிமையுடைத்து என்ற உறுதியை நிலை நாட்டவேயாகும்.

"நீத்தார் நினைவு நாள் விழா" என்றதுமே நீங்கள் நினைத்திருக்கலாம்; சமர்க்களத்திலே அமர் பல புரிந்து வேற்றுரை வென்று விழுப்புண் பட்டிறந்தானே இமயவரம்பன், அவன் நினைவு நாளோ என்றெண்ணியிருக்கலாம். ஆம் நான் கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால் நம்மனைவருடைய எண்ணமும் தவறு என்பதை நமது நாடகக் கலை மன்றத்தார் நடிக்கப்போகும் நாடகம் நமக்கு அறிவுறுத்தப் போகின்றது. கண்டுகளிக்க வாரீர் என்று தமிழ்க்கன்னியின் சார்பில் வேண்டுகின்றேன். நாடகத்தின் பெயர் "விதி"

காட்சி 2

[இடம் :—இமயவரம்பன் பேரவை. இமயவரம்பன் செங்குட்டுவன், இளங்கோ முதலியோர் வீற்றிருக்க; தமிழ்த்தாய் வாழ்த்துடன் கூத்தொன்று நடைபெறுகின்றது. கூத்து முடியும் நேரம். நிமித்திகன் ஒருவன் அவையினுள் புகுந்து.......]

நிமித் :—இமயத்திலே கொடி நாட்டிய இமயவரம்ப! வாழ்க! எத்திக்கும் புகழ் நாட்டிய எம்சேர வாழ்க!

இமய :—வருக! அன்பரே வருக!! நீவிர்........?

நிமித் :—யாவிரோ என்று வினவுகின்றீர்! கூறுகின்றேன் கேளும்! இமயமுதல் குமரிவரை இடைப்பட்ட நாடுகளிலே என் பேர் கேளார் இரார்: கங்கை முதல் காவிரி வரை என் கால் படா இடத்தைக் காண முடியாது. எங்கும் செல்லினும் வெற்றி! எதைக் கூறினும் வெற்றி! வெற்றி மேல் வெற்றி!

செங்கு :—வறட்டு வேதாந்தத்தை நிறுத்தி வந்த காரியத்தைக் கூறும்,

இமய :—ஆம்! அது தான் நன்மை பயக்கும்.

நிமித் :—அரசே! மன்னிக்கவும்! யான்.... முகக்குறி கண்டு அகக்குறி ஆய்ந்து கூறுவதில் வல்லவன். நிமித்திகன் என்பர் உலகோர். என் பெயரோ மதுகரன்! முக்கால்

நிகழ்ச்சிகளை முறைபடக் கூறுவதில் வல்லவன். எக்காலும் என் வார்த்தைகள் பொய்க்காது ; முக்காலும் உண்மையே! கதிரவன் திசை மாறலாம்; கடல் நீர் வற்றலாம்.......

இமய :—ஆனால் உமது குறி மட்டும் பொய்க்காதென்கின்றீர்! ஏன் அப்படித்தானே!

செங்கு :—இல்லை! மெய்யாகாதென்கிறார் இந்த மேதாவி. மனத்தின் முடிவை நினைத்தால் கூறும் மானசீகர்.

இமய :—இருக்கட்டும்! கூறும் கேட்போம்.

நிமித் :—மன்னவரேறே! மன்னிக்க வேண்டும்! இந்த மதுகரன் வார்த்தையை மண்டலமே ஒன்று கூடினும் மாற்ற முடியாது ; மண்டலமென்ன, மகேசுவரனாலும் மாற்ற முடியாது.

செங்கு :—ஓகோ, நீர் அத்துணை வன்மையுடையவரோ!

இமய :—எங்கே கூறும் கேட்போம்!

நிமித் :—"மண்ணாள் வேந்தே! நின்வாழ்நாட்கள் தண்ணான் பொருநை மணலினும் சிறக்க!" தங்கட்கு ஆண்டு அறுபதிற்கு மேலாகிவிட்டது. அரசு வீற்றிருக்கும் திருப்பொறி அகலும் நாள் அதிவிரைவில் தங்களைத் தேடி வருகின்றது.

இமய :—என்னைப்பற்றியதிருக்கட்டும்! (செங்குட்டுவனைச் சுட்டிக்காட்டி) இவன் எனது மூத்த மகன்! பெயர் செங்குட்டுவன். (இளங்கோவைக் காட்டி) அதோ வீற்றிருப்பவன் எனது இளஞ் செல்வன், பெயர் இளங்கோ. நரைமுதிர் யாக்கை கண்டபின்னர் நாளை எண்ணி, நற்போர் புரிந்து விழுப்புண் பட்டு விண்ணுலகடைய வேண்டியவன் தானே நான். என்னைப்பற்றி வேண்டாம் ; இவர்களைப் பற்றிக்கூறும்!

நிமித் :—மன்னவர் பெரும! (செங்குட்டுவனைக் காட்டி) இதோ வீற்றிருக்கும் அரசர் பெருமகனார், பல்லூழி காலம் பகலவன் என்ன வாழ்க!

ஆங்கே வீற்றிருக்கும் இளங்கோ, விண்ணகம் போற்ற இம் மண்ணகம் ஆண்டு தண்ணளி சுரக்கும் தகுதி பெற்றிருப்பதைக் காணுகின்றேன். இளையவர் முடிசூடுவார். அரச அமிசங்கள் அனைத்தும் பொருந்தியவர் இளங்கோவே ஆவர். வாழ்க எம்கோவே! வாழ்க.

இளங் :—நிமித்தரே! நிறுத்தும் உம் வாக்கை. மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டஞ் சூட்டக்கூறும் முறைகெட்ட வார்த்தையை.

அழும் :—என்ன நாத்துடுக்கு..........

செங்கு :—(உறுத்து நோக்கி) இவர் முக்காலமும் உணர்ந்த முனிவர். தன் காலத்தைக் கணிக்கத் தெரியாதவர் என் காலத்தைக் கணிக்கத் தொடங்கிவிட்டார்.

(செங்குட்டுவன் அவையைவிட்டு வெளியேறுகின்றான்)

நற்சோணை :—செங்குட்டுவன்! செங்குட்டுவன்!! (இமயவரம்பனைப் பார்த்து) ஏன் புறப்பட்டுவிட்டான்! மகனே! மகனே!

[அவை கலைகிறது] [தொடரும்.]

செய்தித் திரட்டு

இலங்கையின் பிரபல நீச்சற்காரரான முருகப்பிள்ளை நவரத்தினசாமி இலங்கையிலுள்ள கனகேசன் துறையிலிருந்து இந்தியாவின் கடைக்கோடி மூலையான கோடிக்கரைக்கு (38 மைல் தூரம்) நீந்திவந்து புது உலக ரிக்கார்டு ஏற்படுத்தியுள்ளார்.

*　　*　　*

தன்னை மணந்துகொள்ளப் போகிறவர் உடல் நலமுடையவரா என்பதை முன்னதாகவே தெரிந்து கொள்ளும் வசதி பிரிட்டனில் ஏற்படவிருக்கிறது. இதற்கான ஒரு மசோதா காமன்ஸ் சபையில் வரும்.

*　　*　　*

"என்னை ஒரு ஹரிஜன் என அர்ச்சகர்கள் அறிந்துகொண்டால் கோவிலுக்குள் என்னை அனுமதிப்பார்களா என்பதை என்னால் நிச்சயித்துக் கூறமுடியாது" என யூனியன் போக்குவரத்து மந்திரி ஜகஜீவன்ராம் ஆக்ராவில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

*　　*　　*

இந்தியாவின் சைக்கிள் இறக்குமதி இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் நின்றுவிடும் என்று இந்திய சர்க்கார் நம்புவதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

"இந்த மாநிலத்தில் குறுக்கெழுத்துப் போட்டிகளைத் தடை செய்வதா; லைசென்சு முறையை ஏற்படுத்துவதா; அல்லது, கட்டுப்படுத்துவதா என்பது குறித்து சென்னை சர்க்கார் யோசித்து வருகின்றனர்" என்று சட்ட சபையில் சட்ட மந்திரி தெரிவித்தார்.

*　　*　　*

இந்திய சினிமாத் தட்டுகளை அடியோடு தடை செய்வது அகில இந்திய ரேடியோவின் நோக்கமல்ல வென்றும், நல்ல தட்டுகளை மட்டும் வைக்கக் கட்டுப்படுத்துவதுதான் தங்களது நோக்கம் என்றும் மக்கள் சபையில் ரேடியோ மந்திரி தெரிவித்தார்.

*　　*　　*

"தேயிலைக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள தேவை நீடித்து நிலைக்கும். புதுத்தேயிலை மார்க்கெட்டுக்கு வந்தவுடன் தேயிலை விலை குறைந்துவிடுமென எதிர்பார்க்கலாம்" என இந்தியத் தேயிலை சங்கத் தலைவர் கூறுகிறார்.

*　　*　　*

புகுத்தவிருக்கும் புதுவரிக்குக் கண்டனம் தெரிவிக்கும் பொருட்டு சென்னை மாநில முழுமையுமுள்ள தங்கம், வெள்ளி, வைரம், நகை வியாபாரிகள் அடையாளக் கடையடைப்பு நடத்துவதெனத் தீர்மானித்துள்ளனர்.

*　　*　　*

புதுச்சேரி மக்கள் பிரெஞ்சு ஆட்சிப் பிடியினின்றும் விடுபட சுதந்திர முழக்கமிடத் தொடங்கிவிட்டனர். எல்லாக் கட்சிகளும் இதற்கு ஆதரவு தரத் தொடங்கியிருக்கின்றன.

கல்லாதார்!

" எழில்வேந்தன் "

இராகம்: சாமா. தாளம்: ஆதி.

தொடுப்பு

விலங்கினை ஒப்பாரே உலகில்
இலங்குநூல் கல்லாதார் (விலங்)

எடுப்பு

கலங்கும் நிலையை நீக்கிக் கதிபெற வழிகாட்டித்
துலங்கிடும் கல்வியை நலமுறப் பயிலாதார் (விலங்)

முடிப்பு

நல்லியல் பனைத்தையும் நமக்களிக்கும் கல்வியை
அல்லும் பகலுமதை ஆர்வமுடன் பயிலார்
புல்லினும் புல்லரென்று பொருளுணர்ந்தோர் உரைப்பர்
தொல்லுலகில் அவரைத் துச்சமென்றே மதிப்பர்

(விலங்)

கர்ப்பதடை

"ஸ்பெக்ஸ்"

மாளாது மக்களைப் பெற்று மனமுடைந்து போனீர்களா? குறைந்த வருவாய் நிறைந்த குடும்பம், உடைந்த உள்ளம். இல்லறத்திலே மலர்ச்சி, மங்கிய வாழ்க்கையிலே எழுச்சி இவைகளை உதயமாக்குகிறது **ஸ்பெக் டாப்ஸ்** கர்ப்பத்தடை மாத்திரை.

செயற்கை முறை தவிர்த்து, இயற்கைக்கு இடையூறு இன்றி கர்ப்பத் தடை செய்கிறது ஸ்பெக் டாப்ஸ். வாழ்க்கையில் இன்பத்திற்கு இடையூறு விளைவிக்காது, துன்பத்தைத் துடைக்கிறது ஸ்பெக் டாப்ஸ்.

ஸ்பெக் டாப்ஸ் சிறந்த கலப்புத் திரவிஷயங்களிலிருந்து சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது. கர்ப்பப் பையில் உற்பத்தியை நீக்குகிறதே ஒழிய உடற்கூற்றைப் பாதிப்பதில்லை. **பத்தியம் கிடையாது.**

ஆறுவருட காலத்திற்கு கர்ப்பத்தடை செய்யும் 24 மாத்திரைகள் கொண்ட பாக்கெட் ஒன்றுக்கு ரூ. 12-0-0. **(தபால் செலவு தனி)**

விபரங்களுக்கு விண்ணப்பிக்கவும் :—

Seenu & Co.,

Post Box No. 1638 (1) Madras-1.

Branches :

136, Serangoon Road,
Singapore-8.

4, Jalan Maharani,
Muar (Malaya)

Agents :

New Colombo Medical Stors,
82, Main Street, Colombo-1.

City Medical &
General Agencies,
89, Chickpet,
Bangalore City.

விநோத மண முறைகள்

எஸ்.என்.கே.ராஜன்

மணம் என்பது மக்களின் செம்மையான வாழ்க்கைக்கும, சமூகப் பண்பாட்டிற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் இன்றியமையாத ஒரு சடங்கு. ஆனால் மக்கள் யாவரும் ஒரேவிதமான மண முறையைக் கையாளுவதில்லை. மதத்திற்கும், ஜாதிப் பிரிவினைக்கும், வாழும் இடங்களின் பண்பாட்டிற்கும், பொருளாதார நிலைக்கும் ஏற்றவாறு மண முறைகள் அமைக்கப்படுகின்றன.

மக்களிடையே இருந்து வரும் பழக்க வழக்கங்கள் முன்னாளில் இருந்தன போலவே பரம்பரையாகத் தொடராமல் கால மாற்றத்திற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்றவாறு மாறுபாடடைகின்றன. அம் மாறுபாட்டை மக்கள் அறிந்தால்தான் முற்காலத்திற்கும் தற்காலத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு, சமூகத்திற்கு நாகரிகம் விளைவித்த நன்மை தீமைகளை நன்கு உணரமுடியும்.

அவ்வாறு மாறுபாடடைந்த பழக்க வழக்கங்களில் மணமும் ஒன்று. இந்தியாவில் பற்பல ஜாதியார் கையாளும் மண முறைகளைத் தொகுத்து எழுதியுள்ளேன். ஆனால் இந்தியாவில் வாழும் எல்லா ஜாதியாரிடையிலேயும் வழக்கிலுள்ள அத்தனை மண முறைகளையும் எழுதாமல், நாம் கண்டும் கேட்டுமிராத விநோத மண முறைகளை மட்டும் எழுதியுள்ளேன். இம்மண முறைகளிற் சில நாகரிக வாடை படாத அநேக ஜாதியாரிடையே இன்னும் வழக்கிலிருந்து வருகின்றன.

இதை வாசக அன்பர்கள் விருப்பமுடன் இரசித்துப் படிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கொண்டர்:

கஞ்சம் ஜில்லாவில் வசிக்கும் கொண்டர் (Khonds) என்னும் மலை நாட்டாரின் மணமுறை பின் வருமாறு: மண மக்களின் பெற்றோர் மணத்தை நிச்சயிப்பர். மணமகள் வியாபாரப் பொருளாக் மதிக்கப்பட்டு விலைகூறப் படுவாள். அவ் விலை பணத்தின் மதிப்பில் இல்லாமல் ஆடு, மாடு, பன்றி, பித்தளைப் பாத்திரங்கள், தானிய வகை முதலியனவாக இருக்கும். சாதாரணமாக மாப்பிள்ளை வீட்டார் ஒருவர் கொடுக்கும் விலை மதிப்பானது சுமார் இரண்டு மாடு, இரண்டு ,எருமை ஐந்து மூட்டை தானியம் பத்து, பித்தளைப் பாத்திரங்கள், பத்து ஆடுகள், ஐந்து பன்றிகள், இருபது கோழிகள் ஆகும். ஆனால் அதற்குக் குறைந்தும், அதிகமாகவும் கொடுப்போரும் உண்டு. ஒரு கொண்டன் தன் கிராமத்தை

விட்டு நீங்கி, மற்றொரு கிராமத்திற்குச் சென்று பெண்ணைத் தேர்ந்தெடுப்பான். பிறகு அவளுக்கு வேண்டிய விலையைக் கொடுத்து, மணமகன் வீட்டிற்குப் பெண்ணைக் கொண்டு போகும் நாளைக் குறிப்பிடுவார்கள் சுற்றத்தார். அன்று பெண்ணின் மாமன் அவளைச் சிவப்புத் துப்பட்டியால் போர்த்தித் தோளின் மேல் சுமந்து செல்வான். அவனைத் தொடர்ந்து அக்கிராமத்துப் பெண்கள், மணப் பெண்ணின் தந்தை தன் மகளுக்காகக் கொடுத்த துணிகள், பித்தளையால் செய்யப்பட்ட ஆபரணங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு வாத்திய கோஷத்துடன் செல்வார்கள். இரு கிராமத்திற்கும் மத்தியில் அவ்வூர் வலம் மணமகனையும், அவன் கிராமத்தாரையும் சந்திக்கும். அவர்கள் ஒவ்வொருவரும் போர்வையால் போர்த்துக் கொண்டு, அப் போர்வைக்குள் ஒரு மூங்கில் தடியையும் மறைத்து வைத்துக் கொண்டிருப்பர். மணமகளின் கிராமத்திலிருந்து வந்த பெண்கள் மணமகனின் கூட்டத்தாரின் மேல் கல்லையும், மண்ணுங்கட்டிகளையும், மற்றும் கைக்குக் கிடைத்த பொருள்களையும் எடுத்து எறிவர். உடனே ஆண்கள் தத்தம் கைகளில் மறைத்து வைத்துக்கொண்டிருக்கும் தடிகளால் அவற்றைத் தடுத்துக் கொள்வார்கள். கிராமத்தை அடையும் வரை அதே போல நடக்கும். ஆனுல் அது வெறும் விளையாட்டுச் சண்டையாக இராமல் அநேகர் பலத்த காயமும் அடைவர். சண்டை முடிந்ததும் மணமகனின் மாமன் ஓடிவந்து மணப்பெண்ணைப் பற்றி இழுத்துக் கொண்டு மணவீட்டிற்குப் போவான். பிறகு மணமகன் வீட்டார் எல்லோரையும் நன்ருக உபசரிப்பார்கள். மறுநாள் ஒரு எருமையையும், ஒரு பன்றியையும் கொன்று, சமைத்து விருந்து வைப்பார்கள். மூன்ரும் நாள் கிராமத்துக் கொண்டர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு நாட்டியத்தை ஏற்பாடு செய்து கண்டு மகிழ்வார்கள். நான்காம் நாள் மணமகனின் வீட்டில் எல்லோரும் கூடுவார்கள். மணமக்களை ஒரு கட்டிலின் மேல் உட்காரவைத்து, மணமகனின் தமையன் கூரையைச் சுட்டிக்காட்டி, "இந்தப் பெண் நம்மிடம் ஒழுங்காக இருந்தால் இவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் மக்களாகவும், புலிகளாகவும் இருக்கட்டும்! அன்றி நெறி தவறி வீட்டை விட்டு ஓடினுல் இவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பாம்புகளாகவும், குரங்குகளாகவும் ஆகிச் சாகட்டும்!" என்று கூறி வாழ்த்துவான். அத்துடன் மணச் சடங்கு முடியும்.

குட்டைய கொண்டர்:

குட்டைய கொண்டர் (Kutiya Khonds) என்ற ஜாதியாரிடையே பெண்கள் கற்பைப் போற்றிக் காப்பதில்லை. பருவமடைந்த மணமாகாத ஆண்களும், பெண்களும் ஒன்ருகக் கலந்து அதற்கென விடப்பட்ட குடிசைகளில் படுத்து உறங்குவர். அதுவும் தவிர ஒரு பெண் தன் பெற்ரோரின் சம்மதத்தின் மேல் தனக்கு விருப்பமான யாரை வேண்டுமானுலும் விரும்பிச் சேரலாம். ஆனுல் ஒருத்தியை மணக்க ஒருவன் விரும்பினுல்

அவன் அவளுக்கு ஒரு புதுத் துணியை வாங்கிக் கொடுத்து விட்டால் அவள் கற்புநிலை கெட்டிருந்தாலும் புனிதவதியாகிவிடுவாளாம். பிறகு அவன் அவளைத் தன் மனைவியாக்கிகொள்ளலாம்.

கூம்ஸூர் கொண்டர் :

கூம்ஸூரைச் சேர்ந்த கொண்டர்களில் (Khonds of Gumsur) மணப்பெண் மணமகளின் வீட்டிற்கு வந்த உடனே இருபது அல்லது முப்பது ராத்தல் எடையுள்ள இரண்டு பித்தளைக் காப்புகளை பெண்ணின் இரண்டு கைகளுக்கும் மாட்டுவார்கள். பரிதாபத்திற்குரிய அந்தப் பெண் பளுவைத் தாங்க முடியாமல் தன் கைகளைத் தோளின் மேல் வைத்துக்கொண்டு உட்காருவாள். அப்படிச் செய்வது அப்பெண் தன் வீட்டிற்கு ஓடிவிடாமலிருப்பதற்காகவும், மணமகன் வீட்டிற்கு அடிமையாகிவிட்டாள் என்கிற கருத்தையும் கொண்டதாம். மறுநாள் அக்காப்புகள் நீக்கப்பட்டு மணச்சடங்கு முடிவு பெறும். அக்காப்புகள் அம்மலைநாட்டிலேயே சிற்ப வேலைப்பாடுடன் செய்யப்பட்டு வம்ச பரம்பரையாக ஒவ்வொரு மணத்தின் போதும் உபயோகிக்கப்படும்.

ஜோகி :

ஜோகி (Jogi) என்னும் பன்றி வளர்க்கும் தெலுங்கு ஜாதியாரில் மணமகனும் அவன் சுற்றத்தாரும் 'பொட்டு' (தாலி)க் கட்டுவதற்காகப் பெண் வீட்டை நாடிச் செல்லும்போது அவர்கள் பெண் வீட்டாரால் கயிற்றினால் தடுக்கப்பட்டு நிற்பர். சிறிது நேர சச்சரவிற்கப்புறம் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருப்பவர்களுக்குப் பணத்தைக் கொடுத்து உள்ளே செல்வார்கள். அந்தக் கயிறுக்கு 'வல்லபு தாடு' (பந்தத்துவக் கயிறு) என்பது பெயர். அதன் அறிகுறி மணமக்கள் ஒன்று சேர்வதற்கு முறையானவர்கள் என்பதாம்.

ஜோகி நாடோடி :

ஜோகி என்ற மற்றொரு வகையைச் சேர்ந்த நாடோடிக் கூட்டத்தாரிடையே மணமாகும்போது மண மகனும், மணமகளும் நான்கு ஆடுகளையும், பத்துப் பானைகளையும் வந்திருக்கும் விருந்தாளிகளுக்குக் கொடுக்கவேண்டும். ஏழ்மையின் காரணமாக அப்படிக் கொடுக்கத் தவறினால் மண மக்களில் யாராவது ஒருவர் தலைமீது மூன்று அடிகள் கொடுத்து சாண நீரை ஊற்றி, மூன்று ரூபாய் அபராதம் விதித்த பிறகுதான் மணச் சடங்கை நடத்த விடுவார்கள். அந்த அபராதத் தொகையில் ஒரு பாகம் அந்த ஜாதித் தலைவனைச் சேரும், மீதியைக் கொண்டு மற்றவர் குடித்துக் களிப்பார்கள். மணமக்கள் ஆடுகளையும் பானைகளையும் கொடுத்தரல் அதைக்கொண்டு விருந்து வைத்து உண்டு மகிழ்வார்கள் பிறகு மணம் முடிவடையும்.

குடகு நாட்டார் :

குடகு நாட்டில் மணமகன் ஒரு குதிரையின் மேல் ஏறி வந்து பெண் வீட்டிற்கு முன் இறங்குவான். இறங்கி வாயிலைத் தாண்டி உள்ளே போகும்போது அவன் பெண் வீட்டாரால் தடுக்கப் படுவான். பிறகு பெண் வீட்டார் அவன் கையில் ஒரு பெரிய வாளைக் கொடுத்து, அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்

கும் வாழை மரங்கள் ஒவ்வொன்றையும் ஒரே வீச்சில் வெட்டி விழ்த்தும்படி சொல்லுவார்கள். அப்படி முடியாவிட்டால் மூன்று முறை வாய்ப்பளித்து வெட்டச் சொல்லுவார்கள். அதிலிருந்து மணமகனின் உடலுறுதியை அவர்கள் நோக்கத்தில் வைத்து மணத்தை முடிக்கிருர்கள் என்பது தெளிவாகிறது.

கென்னர் :

குடகு நாட்டில் கென்னர் என்ற ஜாதியாரிடையே ஒருவன் ஒரு புதுத் துணியை ஒரு பெண்ணுக்குக் கொடுத்து, அவள் அதை விருப்பமுடன் வாங்கிக்கொண்டால் யாதொருவிதச் சடங்குமில்லாமல் மணம் முடிந்ததாகக் கொள்வர். ஆனுல் அவளை எப்பொழுதும், எக்காரணங்கொண்டும் விலக்கக் கணவனுக்கு அதிகாரம் உண்டு.

கோயி :

கோதாவரியைச்சேர்ந்த கோயி (Koi) என்ற மலைநாட்டு விவசாயிகளிடையே பால்ய மணம் கிடையாது. ஆனுல் ஒருவன் பல மனைவிகளை மணக்கலாம். மணமகன் பணக்காரனுக இருந்தால் அவனுக்குப் பெண் கிடைப்பது சுலபம். ஆனுல் ஏழையாக இருந்தால் மணக்க விரும்புகிறவன் தன் பெற்ருேருடனும், நண்பர்களுடனும் பெண்ணின் கிராமத்தை அடைந்து, கிராமத் தலைவனுடன் கலந்தாலோசித்து, பெண் வீட்டாரின் சம்மதத்தைப் பெறுவான். அதற்குக் கொஞ்சம் பணமும் குடிவகையும்தான் தேவை. அது முடிந்ததும் மணப்பேச்சு நடக்கும். பிறகு பெண் தனிமையில் தண்ணீர் எடுக்கவோ, அன்றி வேறு வேலையாகவோ வெளியே வந்தாலும், அல்லது வீட்டில் தனியாக விடப்பட்டிருந்தாலும், அப்பொழுது அத்தருணத்தையே எதிர்பார்த்திருந்த மணமகன் வீட்டார் அவளைக் கடத்தித் தங்கள் கிராமத்திற்குக் கொண்டு செல்வார்கள். அடுத்த நாள் மணப்பெண் வீட்டார் மணமகன் வீட்டிற்குச் செல்வர். பிறகு மணம் நடக்கும். மணத்தின்போது மணப்பெண்ணை குனிய வைத்து அவளுக்கெதிரில் மணமகன் நின்று அவளுடைய தலைக்குமேல் தன் தலையைத் தாழ்த்திக்கொள்வான். பிறகு எல்லோரும் சுரை புருடையில் தண்ணீரை எடுத்து மணமகனின் தலையின் மேல் ஊற்றுவார்கள். அது அவன் தலையின்மேல் வழிந்தோடி பெண்ணின் தலை மேலும் விழும். அது முடிந்ததும் இருவருக்கும் தலையைத் துவட்டி உட்கார வைப்பர். இருவரும் இணைபிரியாமலிருப்பதாகச் சத்தியம் செய்யச் சொல்லிக் குடிக்கப் பாலையும் கொடுப்பார்கள். பிறகு இருவருக்கும் சாதம் பரிமாறி முன்போலவே சத்தியம் செய்யச் சொல்லிச் சாப்பிட வைப்பார்கள். முடிவாக பெரியோர்கள், "நீங்கள் சந்தோஷமாயிருங்கள்!.... நீங்கள் சண்டை போடாமல் இருங்கள்!" என்று வாழ்த்துவார்கள். மணமும் முடிவடையும்.

(தொடரும்)

ஏது அறிவு?

"வாழ்நன்"

ஏது அறிவு? படித்துப் பல்கலைக் கழகப் பட்டங்களைப் பெறுவதா? பாமர மக்களை ஏமாற்றிப் பணந் திரட்டுவதா? யாருமறியாமல் கொள்ளையடிப்பதா? புறத்தாரறி யாத வகையில் கையூட்டுப் பெறு வதா? இல்லை உள்ளொன்று வைத்துப் புறம் பொன்றுரைத்து ஊரை ஏமாற்றுவதா? பொய்யை மெய்யென்றுணரும் வகையில் திறனுடன் எழுதுவதா? பேசு வதா? அல்லது பிறர் எழுதிய நூல்களையோ, கவிதைகளையோ, கட்டுரைகளையோ திருடி யாரும் காணாதவகையிலும் கண்டாலும் மறுக்கும் முறையிலும் வாதிடும் திறமை பெற்றிருப்பதா? என் பதை நீங்கள் சிறிது சிந்திக்க வேண்டும்-ஏனெனில்,

"மாவும் மாக்களும் ஐயறிவினவே
"மக்கள் தாமே ஆறறி வுயிரே"

என்பது தொல்காப்பியம். இவ் வாறு பெறுதற்கரிய ஆறுவதறி வாகிய பகுத்தறிவினைப் பெற் றிருந்ததும் பலர் வாழ்வில் பயன் படுத்தாது விட்டுவிடுகின்றனர். பகுத்தறிவென்று பகர்வதே நல் லது தீயது, அறம் மறம், புகழ் பழி, கொள்ளத்தகுவன இவை தள்ளத் தகுவன இவை என்று உணர்வது, உணர்த்தும் நல் லறிவேயாகும். அஃதின்றி மனம் விழையும் நெறிகளிலெல்லாம் செல்வதோ, அறமல்லாத வழி களில் ஒழுகுவதோ அறி வாகாது. இதைக் குறித்து வள்ளுவர்

"சென்ற விடத்தால்
செலவிடாதீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பதறிவு"

என்று நயமாக மொழிந்திருக் கின்றார். இதன் கருத்து யாதெனில் தீய வழியிலே மனம் செல்லுமாயின் அதனைத் தடுத்து நிறுத்தி நல்வழிப் படுத்துவதே அறிவு என்று கூறுகிறார்.

ஆகையால் தம்மை அறிவுடை யாராகக் கருதுகின்ற, கருதப்படு கின்ற எவரும் தமிழ்ச் சான்றோர் வரையறுத் தொதுக்கிய செந் நெறியன்றி வேறு நெறியில் ஒழு குதலாகா தென்பதுதெற்றெனப் புலனாகின்றது. மேலும் குடியாட் சியிலே வாழும் நாம் பலவற்றைப் பற்றி எழுதவும், பேசவும், மற்ற வர் பேசுவதையும் எழுதுவதையும் கேட்கவும் பார்க்கவும் உரிமை பெற்றிருக்கின்றோம். இந்த நிலை யில் நம்நாட்டு மக்கள் பலபேரிட ருக்காளாகின்றனர். எவ்வாறெ னில் பலர் ஒரே காலத்தில் ஒன் றைப் புகழ்வதும், வேறு சிலர் பழித்தும் திரித்தும் பகையுண் டாகுமாறு பேசியும் உண்மையை மறைத்தும் பொய்மையைப் பெருக்கி எழுதியும் பேசியும் வரு வதைக் கண்கூடாகக் கண்டு வரு கின்றோம். அது மட்டுமின்றி புராண இதிகாசங்களில் கூறப் படுங் கருத்துக்கள் நல்ல புளுகு கள் என்று நாளும் (விஞ்ஞானம்) மறுத்து வருவதையும் கண்டு வரு கின்றோம். இவ்வித இடர்ப்பா டான சூழ்நிலையிலே சிக்குண்டு சிந்தை தடுமாறும் நாம் எது உண்மை? எது சரி? எது

அறிவு? என்று தெரிய முடியாது செல்வாக்காலும் பிறவற்ருலும் மேம்பட்டு விளங்கும் செல்வர்கள் கூறுவதையும், ஆட்சிப் பொறுப்பிலே யுள்ளவர்கள் கூறுவதையும் மக்கள் உண்மையென்று நம்பி மதியிழந்து வருகின்ற இன்று ஈராயிரத்தைந்நூறு (2500) ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய நமது வள்ளுவர் பெருமான் வழங்கிய அமிழ்தத் திருக்குறளே நமது அறிவுக் கண்ணைத் திறக்கும் ஆற்றலுடையது, அது.

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு"

என்பதாகும்.

அதாவது எந்தவொரு பொருளைப்பற்றியும், எந்நிலையில் இருப்போராயினும், எவண் உறைந்திருப்பினும், எவ்வேடத்திலிருப்பினும், பகைவனுயினும், பண்புசால் நண்பனுயினும் பழிகூறும் பண்பில்லாப்பதடிகளாயினும். கூறிய பொருளின் உண்மை நிலையை உண்மையின் அடிப்படையை அதன் வேரைக் கண்டு தெளிவதே அறிவு என்று அறிவுறுத்தியிருக்கின்ருர். மேலும் மெய்யறிவு பெற்றவன் பிறர் துன்பங் கண்டுழி தான் இன்புருது, துன்பந்துடைத்துத் துயர்களைந்து தாம் பெற்ற இன்பம் தரணியோர் யாவரும் காண செய்வினைத்திறனுடையனுக சீரிய நோக்க முடையோனுக இலங்குதல் வேண்டும். இது குறித்தே

"அறிவினுன் ஆகுவதுண்டோ
பிறிதின் நோய்
தன்னோய் போல்போற்ருக் கடை

என்ருர் நம் திருவள்ளுவர். ஆதலின் தெள்ளிய அறிவுடையரென்போர் தீஞ்சுவைத் திருக்குறள் கற்று உண்மை அறிவு பெற்று, குறுகிய எண்ணம் ஒழித்து உலகமுய்ய உறுதுணை புரியுமாறு இன்தமிழ்த் தாயை இறைஞ்சுதும் யாமே!

பொன்னி

(மாதமிருமுறை)

	உள்நாடு	வெளி நாடு
ஆண்டுச் சந்தா	ரூ. 6—0—0	ரூ. 7—8—0

ஓராண்டுக்குக் குறைந்த சந்தா கிடையாது, சிலோனுக்கு மட்டும் வி. பி. பி. மூலமாக அனுப்பப்படும். தனிப்பிரதிக்கு 0—5—0 தபால் தலை அனுப்பவேண்டும்,

உங்கள் சந்தா சம்பந்தமாக அலுவலகத்திற்கு எழுதும்போது உங்களுடைய சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டியது அவசியம்.

விபரங்கட்கு:

பொன்னி லிமிடெட்

111, பவழக்காரத் தெரு, சென்னை-1

இலங்கையிலே

காதல் புயல்

"கவிஞன், தத்துவஞானி, தேசபக்தன் எல்லோருக்கும் காதலே வழி காட்டியாக இருக்கின்றது" என்றான் இங்கர்சால். இது ஓரளவுக்கு உண்மையாக இருக்கலாம். ஆனால், இந்தக் காதல் பலருக்குத் தற்கொலைப் பாதையையும் வழி காட்டியிருக்கிறது என்பதையும் நாம் அறிவோம்.

காதல் எல்லோருடைய வாழ்க்கையிலும் வெற்றியடைவதில்லை. ஒரு சிலருடைய காதல்தான் வெற்றிமாலை சூடுகிறது. இவர்களைப் பொறுத்தவரை, காதல் தென்றலாக இருகின்றது. ஆனால் அநேகருடைய காதல் தோல்வியடைகின்றது. இவர்களைப் பொறுத்தவரை காதல் புயலாக இருக்கிறது. இந்தக் காதல் புயலிலே சிக்கிச் சிதைந்து விடுகிறது வாழ்க்கை. உயிரையே போக்கிக் கொள்ளும் அளவுக்கு வந்து விடுகிறார்கள். தங்களுடைய காதல் தோல்வியடைந்து விட்டதை எண்ணி எத்தனையோ பேர் தற்கொலை செய்திருக்கிறார்கள். சாவை நோக்கி ஓடியிருக்கிறார்கள். இப்படியான சம்பவங்கள் எல்லா நாட்டிலும் நடந்திருக்கின்றன. இப்போதும் நடக்கின்றன. என்றாலும் இத்தகையோரின் தொகை இலங்கையிலே பெருகிக்கொண்டு வருகிறது, சமீப நாட்களாக! 1954-ம் ஆண்டு பிறந்ததிலிருந்து இந்த மூன்று மாதங்களாக, நாட்டிலே நடந்த தற்கொலைகளும், கொலைகளும் இதைத்தான் காட்டுகின்றன, உலகத்திலே எந்தப்பெரிய நாட்டிலும் நடக்காத அளவுக்கு இந்தச் சின்னஞ் சிறிய தீவிலே இவை நடந்திருக்கின்றன. உதாரணமாக:

இந்த வருடம், பிப்பரவரி மாத ஆரம்பத்தில் ராமச்சந்திரன் என்ற ஒரு இளைஞன் தனது காதல் தோல்வி காரணமாக ஆறுபேரை-அதாவது ஒரு குடும்பத்தையே சுட்டுக் கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்து கொண்டான்! இந்தத் திடுக்கிடும் கோர நிகழ்ச்சி இலங்கையையே ஒரு குலுக்குக் குலுக்கி, பெரும் பரபரப்புக்குள்ளாக்கிவிட்டது.

இதற்கு இன்னொரு காரணமுமிருந்தது. அதாவது ராமச்சந்தி

ரன் என்ற அந்த இளைஞன், தான் இந்த முடிவுக்கு வரவேண்டிய காரணத்தை விரிவாக எழுதி இலங்கைப் பத்திரிக்கைகளுக் கெல்லாம் அனுப்பிவிட்டுத்தான் இந்த விபரீத விளையாட்டில் ஈடு பட்டான்.

இந்தக் கொலைச் சம்பவம் நடந்த மறுநாள் எல்லாப் பத் திரிகைகளும், ராமச்சந்திரனின் கடிதங்களை கொட்டை எழுத்துக் களில், முதல் பக்கத்தில் பிரசுரித் தன. தேர்ச்சி பெற்ற ஒரு எழுத் தாளன் சோகமயமான ஒரு காதல் கதையை எழுதினால் எப்படியிருக் குமோ, அதைப்போன்று இருந் தன, அந்தக் கடிதங்கள். உண் மையாகச் சொன்னால், கற்பனை யில் கூட அப்படிச் கதையைக் கண்டிருக்கமாட்டோம். அந்த அளவுக்குச் சுவையும், சோகமும் கொண்டதாக இருந்தன. அந்தக் கடிதங்களிலிருந்து போலீஸாரும், 'மதம்' பிடித்துக் கொண்டவர் களும் எப்படி அக்கிரமமாக நடந்து கொண்டார்கள் என்பதை உணர முடிந்தது. இன்றைய சமுதாய அமைப்பின் கோணலையும், போலீஸ் நிர்வாகத்தின் தன்மை யையும் படம் பிடித்துக் காட்டின அந்தக் கடிதங்கள்.

ராமச்சந்திரன் காதல் கதையின் சுருக்கம் இதுதான் ;

ராமச்சந்திரன் இளமையும், எழி லும், முற்போக்கான எண்ண மும் கொண்டவன். அவன் தனது சொந்த ஊரைவிட்டு அனுராத புரம் என்ற நகரத்துக்கு வந்து தொழில் செய்துகொண்டிருந் தான். இந்தச் சமயத்தில் அதே நக ரத்தில் உள்ள முஸ்லிம் வகுப் பைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் காதல் கொண்டான். இருவருக் கும் ஐந்து வருடங்களாக காதல் தொடர்பு இருந்திருக்கிறது. கடை சியில் இவனுடைய காதலி கர்ப்ப வதியானாள். தங்கள் காதலை பெண்ணின் தந்தை ஏற்றுக் கொள்ளமாட்டார், கலியாணம் செய்துகொள்ளவும் உடன்பட மாட்டார் என்று எண்ணி ஒரு நாளிரவு தன்னுடைய காதலியை அழைத்துக்கொண்டு தன்னுடைய சொந்த ஊரான நாவற்குடா என் னும் இடத்திற்கு வந்தான். அங்கு இருவரும் கணவன் மனைவியாகக் குடும்பம் நடத்தினார்கள். ஒரு நாளிரவு இவர்கள் சினிமா பார்த் துக் கொண்டிருந்த சமயத்தில் திடீரென்று போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கு, ராமச்சந்திரனை லாக்கப் பில் வைத்துவிட்டு, அவனுடைய காதலியை, அவனுடைய பெற்றோ ரிடமோ சகோதரனிடமோ ஒப் படைத்து விட்டார்கள். காதலி யைப்பிரிந்த பின் விடுதலையாகி வெளியே வந்த ராமச்திந்திரனுக் குப் பிறகு தான் விஷயம் புரிந் தது. தன்னைப் போலீசார் வஞ் சித்துவிட்டனர் என்று அறிந் தான். இந்தச் சமயத்தில் வெளி காலம் என்ற ஊரிலிருந்து காத லியிடமிருந்து அவனுக்கு ஒரு கடி தம் வந்தது. அதில்தான் அங்கு இருப்பதாகவும் உடனே வந்து தன்னை அழைத்துச் செல்லும்படி யும் எழுதியிருந்தாள். ராமச்சந் திரன் கோர்ட் மூலமாக நட வடிக்கை எடுக்கும் நோக்கத் துடன் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தான். அங்கேயும் இவ னுக்குத்தோல்வி ஏற்படவே, நேரடி யாகத் தன் காதலியை மீட்பதற் காக அவளிருக்கும் ஊருக்குப் போயிருக்கிறான். ஆனால் பெண்

ணின் தந்தையும் மற்றவர்களும், அவளை இன்னொருவனுக்குப் பலாத்காரமாகக் கலியாணம செய்து கொடுத்ததோடு, ராமச் சந்திரன் வந்து அவளை கடத்திக் கொண்டுபோய் விடுவானோ என்ற எண்ணத்தில் அவனுடைய காதலியை ஊருக்கு ஊர் மாற்றிக் கொண்டிருந்தார்கள். ராமச்சந் திரனும் சலிப்படையாமல் தேடிக் கொண்டு அலைந்து திரிந்தான். அத்துடன் ஆண்டவனை அனுதின மும்தொழுதான்தனது காதலியின் தந்தைக்கு தாழ்மையுடன் உருக் கமான கடிதங்கள் வரைந்தான். அதில் தங்கள் அன்பு வாழ்வைச் சேர்க்கும்படியும், இரக்கம் காட் டும்படியும் கேட்டிருந்தான். அந் தக் கடிதம், தந்தையின் இதயக் கதவைத் தட்டவில்லை. பெரும் ஏமாற்றமடைந்த ராமச்சந்திர னுக்கு தன்னுடைய ஒவ்வொரு முயற்சியும் தோல்வியடைந்ததை—தனது காதல், மதம், அதிகாரம், பணம் இவற்றினுல் முறிக்கப்பட் டதை எண்ணியதும் சினம் சீறிப் பாய்ந்தது. பசுப்போல் இருந்த வன் புலியானுன். இதன் விளைவு—

தன்னுடைய காதலுக்கு இடை யூருக இருந்தவற்றை—இருந்த வர்களைப் பழி வாங்கத் தீர்மானித் தான், இந்தத் தீர்மானத்தின் விளை வாக, அவனுடைய காதலியின் தந்தையையும், அவர்தம் குடும்பத் தையும் நிர்மூலமாக்கி விட்டான். தானும் தற்கொலை செய்துகொண் டான். ஆனுல், அவனுடைய காதலி அவனுடைய துப்பாக்கிக் குப் பலியாகவில்லை!

இத்தனையையும், அவன் எழு திய கடிதங்கள் என்று பிரசுரித்த பத்திரிகைகளிலிருந்து, சுருக்கிக் கொடுக்கப்பட்டவை.

''......உலகில் நீதி, அன்பு, ஜீவ காருண்யம், ஒழுங்கு இவைகளு டன் வாழ வேண்டுமென்றுதான் நான் இதுவரை வாழ்ந்தேன். ஆனுல், போலீஸாரே, என் ஒழுங் கான வாழ்வைக் கொலை செய்து விட்டார்கள். என்னிடம் பணம் கொஞ்சம் இருந்தபடியால் வழக் காவது தொடர்ந்தேன். ஒன்று மில்லாத அன்ருடம் ஜீவனம்சம் செய்யமுடியாத ஏழைகளுக்கு, இப்படியான அநியாயங்கள் செய் தால் அம்மக்களின் கதி யென்ன?......

''......ஏழைகளுக்கு அரசாங் கத்தின் பாதுகாப்பில்லை இந்த நாட்டில். பணமுடையவர்களின் கையில்தான் சட்டமும் நியாயமும் சிக்கிக்கொண்டிருக்கிறது. சாதா ரண பொதுமக்களுக்கு உதவாத படி, சட்டத்தையும் நியாயத்தை யும் பணத்திற்காக விற்றுவிடுகி ருர்கள் இன்றைய அரசாங்கத் தில். இப்படியான அரசாங்கத்தில் நானொரு பிரஜையாக இருப்பதை வெறுத்துவிட்டேன்.''

''போலீஸார் இப்படி அநியா யம் செய்யாமல் சட்டப்படி நடந் திருந்தால் நானும், எனது காதலி யும் உண்மை அன்பில் சந்தோஷ மாய், கஷ்டத்தை மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டு, தன்மானத்து டன் வாழ்ந்திருப்போம். ஜாதி, மதம் எங்கள் காதல் வாழ்வைப் பலிகொண்டிருக்காது. கலப்பு மணங்கள் அதிகம் நிகழ்ந்து இன் றும் வாழ்கிருர்கள் பலர். என்னை வாழத் தெரியாதவன், முட்டாள், மடையன் என்றெல்லாம் சமுதா யம் பட்டம் சூட்டலாம். ஆனுல், அதே சமுதாயத்தாலும், அதே

அரசாங்கத்தின் அநியாயத்தாலும் தான் என்னுயிர் போவதும், கொலைகள்ஏற்படுவதும் என்பதை நினைவுறுத்துகின்றேன். உயிரு டன் வாழவிடாத சமுதாயம், அர சாங்கம் நான் செத்தபின் என்ன கதை கட்டினாலும் ஒன்றுதான்...''

தனது காதல் கதையை எழுதிய ராமச்சந்திரன் கடைசியாக இந்த வாசகங்களோடு முடித்திருக்கி ருன். அவன் செய்த கொடிய— கோரச்செயல் சரியா, தவரு— என்ற பிரச்னை ஒருபக்கமிருக்க, இந்தச் சம்பவங்களும், அவனு டைய கடிதமும் பல உண்மைகளை மக்களுக்கு எடுத்துக் காட்டியிருக் கின்றன. மதப் பிளவுகளும், அந் தஸ்து பேதங்களும். சமுதாய வேற்றுமைகளும், அரசாங்க நிர் வாக ஊழல்களும் எந்தெந்த நாடு களில் இருக்கின்றனவோ, அங் கெல்லாம் இப்படியான மோச முடிவுகளும், நெஞ்சு வெடிக்கும் சம்பவங்களும் நடக்கும் என்பது தான்—இந்தப் பொது உண்மை யைத்தான் ''ராமச்சந்திரனின் கதை'' நமக்கு எடுத்துக் காட்டி யிருக்கின்றது. இதைப்போன்று எத்தனையோ திடுக்கிடக்கூடிய,பரி தாபகரமான ''காதல் முடிவுகள்'' உண்டு. இவற்றையெல்லாம் ஏன் என்று கேட்பார் யார்?

— ''இளங்கீரன்''

ஜப்பானிலே!

பிள்ளையோ பிள்ளை

காங்கிரஸ் ஆட்சியில் தமிழ் நாட்டிலே பிள்ளைகள் விலைபேசப் படும் கதையைப்பார்த்தோம். தஞ்சை விவசாயிகளின் குழந் தைகளும், கோவை சேலம் நெச வாளிகளின் குழந்தைகளும் நாலணு எட்டணு என்று விலை கூறப்பட்டனர். இதையும் மிஞ்சிவிடும் போலிருக்கிறது ஜப்பானிலிருந்து கிடைக்கும் செய்தி.

நாய்க்குட்டிக்கு ஐம்பது பவுன் விலையிருக்கிறது. இரண்டு மாதம் நிறைந்த பூனைக்குட்டி 30 பவுனுக்குப் போகலாம். ஆனல் ஒரு ஜப்பானிய குடி யானவப் பெண், பருவ வயதில் நிற்கும் இளமங்கைக்கோ 22 பவுன்கள்தான் விலை கிடைக்கும்!

அடிமை வியாபாரம் சரித்திரத் திலிருந்து ஒழிந்து போய் நெடுங் காலமாகிவிட்டது என்று நாம் கருதிக் கொண்டிருக்கிறேம். ஆனல் டாலர் பூட்ஸிலே தொங் கிக் கொண்டிருக்கும் ஜப்பானிய் ஆட்சியில் மக்கள் நாளுக்கு நாள் வறுமை வாய்ப்பட்டு வதங்கி, மனித இயல்பின் கடைசி எல் லைக்கே போய்விட்ட கொடு மையை இச் செய்தி பறை யறைந்து முழக்குகிறது. 1952-ல் அடிமை வியாபாரம் செய்த தாகச் சந்தேதிக்கப்பட்ட 67,000 பேர் விசாரிக்கப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. பத்து வய துக்குட்பட்ட குழந்தைகள் குத் தகை முறையில் வாடைக்கு விடப்படுகின்றனர். இந்த முறை யில் செல்லும் பெண்கள்தான் அதிகம். அவர்கள் விபச்சாரி களாக்கப்படுகின்றனர். அடி மைக்காலம் தீர்ந்த பின்பும், விபச்சாரத் தொழிலுக்கே உரிய

விசேஷ முறைப்படி இந்தப் பெண்கள் விடுதித் தலைவர்கள் அல்லது தலைவிகளிடம் கடன் பட்டிருப்பதால் வெளியேற முடியாமல் போகிறது. அற்ப ஆயுளிலே, அழுகிய உடலோடு மடியும் ஜப்பானியப் பெண்கள் தொகை அதிகம்.

சிறுவர்கள் மீன் பிடிக்கும் படகுகளுக்கு விற்கப்படுகின்றனர். சிறு சுரங்கங்களுக்கு அடிமைக் கூலிகளாக விற்கப்படுகின்றனர். அடிமை வியாபாரம் மற்ற எல்லா வியாபாரத்தையும் விட அதிகமான லாபத்தைக் கொடுக்கிறதாம்!

சட்ட பூர்வமாக அடிமை வியாபாரம், விபச்சாரம் எல்லாம் தடை செய்யப்பட்டிருக்கின்றன. இருந்தும் அவை சமுதாயத்திலே இவ்வளவு அதிகமாகப் பரவிக் கிடக்கின்றன. இதற்குக் காரணம் என்ன?

மக்களுக்குப் பொருளாதார சுதந்திரம் கிடைக்காத எந்த சமூகத்தின் தலைவிதியும் இப்படித்தான் இருக்கும்! சட்டங்கள் அங்கே கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்பட்ட, அலங்கரிக்கப்பட்ட பிணங்கள் போல் காட்சி அளிக்கும்! அவை இயங்கும் என்று எதிர்பார்ப்பதில் அர்த்தமே இல்லை.

— ஆர். டி. கே. செல்வன்.

அட்டைப் படத்தைப் பார்க்கும் பொழுது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?

ஆடிவரும் பொன்னி நல்லாள்
—அழகுதமிழ்
நாடிவரும் பொன்னி நல்லாள்
—அருவியெனப்
பாடிவரும் பொன்னி நல்லாள்...

உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ எனக்குத் தெரியவில்லை.

நாட்டை வளமாக்கும் பொன்னி நதியையும், நாட்டு மக்களின் வாழ்வை வளமாக்கவரும் முத்தமிழ்ப் பொன்னிக் குழந்தையையும் ஓரே ஓவியத்தில் உருவகமாக்கிவிட்டார் நண்பர் ராதாகிருஷ்ணன். அவர்தான் பொன்னி ஓவியர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியர்.

குரல்கள்

எச். குருமூர்த்தி

குயில் கூவிற்று! கழுதை கனைத்தது!..........

"சகிக்க முடியவில்லை!" என்று முணமுணத்தேன்.

"உங்களுக்கு என்ன வந்தது! ....யார் எப்படிப் போனால்........ ஏதாவது வேலையிருந்தால் போய்ப் பாருங்கள்" என்றாள் மனைவி.

அடுத்த வீட்டிலிருந்து கிளம்பிய சங்கீதம் காதைக் குடைந்தது!

"சங்கீத குருவாம்!....தொண்டையைத் தவிர பாக்கி எல்லாம் இருக்கிறது அந்த வித்வானிடம் பாவம்! அந்தப் பெண்தான் எவ்வளவு நயமாக, செவிக்கிதமாக பாடுகிறாள். தன் குருவுக்குப் பயந்துகொண்டு, தன் தொண்டையைக்கூட அவருடையது மாதிரி அல்லவா மாற்ற முயற்சிக்கிறாள்! என்று எண்ணினேன்.

"ஸார்!........"

வாசலில் குரல் கொடுத்தது யார்?

"தபால் - காரன் போலிருக்கிறது" என்றேன்.

"பால் – காரன் பழைய பாக்கிக்கு வந்திருப்பான்" என்றாள் மனைவி, மட்டந் தட்டிக் கொண்டே.

"எங்கோ கேட்ட குரல் மாதிரி இருக்கிறதே!........ஒரு வேளை ஞாயிற்றுக்கிழமையாயிற்றே, 'பார்பர்' வந்திருப்பானோ!......"

"........உங்களுக்கு மூளைகூட 'க்ஷவரமா' என்ன?........ குரலைப் பார்த்தால் (!) யாராவது கடன்காரப் பயல் கடன் கேட்க (!) வந்திருப்பான்" என்றாள் அவள்.

சோம்பலை விட்டொழித்து விட்டு, வாசல் பக்கம் விரைந்தேன்.

"........ஸார்!..........நான் ரங்கூன்........பி. ஏ. வரை படிச்சிருக்கிறேன்.........அஸிஸ்டெண்ட் கலெக்டராக இருந்து ராஜினாமா பண்ணி விட்டேன்...........பசிக்கிறது......ஒரு 'போர்-அனாஸ்' கொடுங்கள்........என்றது அந்தக் 'குரல்'!

குரலைக் கேட்டு ஆளை நிச்சயம் செய்வது மகா மடத்தனம் என்று அன்றிலிருந்து கண்டு கொண்டேன். இரண்டு பேர்களுடைய குரல்களும் ஒத்திருக்காது என்பது என்னுள் எழும்பும் 'குரல்.'

சில தொண்டைகளைக் கேட்டால் அப்படியே அந்த நபரின் குரல் வளையைப் பிடித்துவிடலாமா என்று ஆத்திரம் குரல் கொடுக்கும். ஒரு குரோஸ் ஐஸ்புரூட், ஒரு வீசை நெய் இவைகளை ஏக காலத்தில் உட்கொண்டதைப்போல் கட்டப்பாறையாக சிலர் தொண்டைகள்

நிரந்தரமாகக் கட்டிக் கிடக்கும் '' அந்த லட்சணத்தில் அவர்கள் பாடவும் செய்து நம்மை சித்திரவதை செய்து விடுகிருர்கள். இன்னும் சில பேருடைய குரல்கள், பெட்டியடியில் நசுக்குண்டு கிறீச்சிடன் எலியின் தீனக்குரலை 'டாக்கி' பிடித்தாற்போல் இருக்கும். நிற்க,

வாழ்க்கையில் ஒரு தினத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நாம் எத்தனைவிதமான குரல்களைக் கேட்டுத்தொலைக்கவேண்டி இருக்கிறது! மனைவியின் குரல் (முணமுணப்பு, ஆத்திரம், அதிகாரம், அலட்சியம் முதலியவையோடு டிகூனது), குழந்தைகளின் அழுகுரல், சிரிப்பொலி, 'ஸார்! டிக்கட்' என்று கண்டக்டரின் குரல், ஆபீஸில் சிப்பந்திகளின் பலதரப்பட்ட குரல்கள், மானேஜர் அல்லது மேலதிகாரியின் குலைக்கும் குரல்.......இத்யாதி.

மேடை மீதேறி, தொண்டைத் தண்ணீர் வற்றக்கத்தும் பிரசங்கியின் குரலை அடக்கப் பல கூக் குரல்கள் எழும்பலாம். ஆனல், சகிக்க முடியாத அபத்தக் களஞ்சியத்தை கொட்டும் இந்த ரேடியோ பிரசங்கிகளின் வாயை அடக்க நாம் ரேடியோப் பெட்டியின் 'குரல்வளை'யை தான் 'திருக' வேண்டிஇருக்கிறது!

வெள்ளித்திரை மறைவில் இரவல் குரல்' கொடுக்கும் இந்தக் கோகிலங்களைப் பற்றி என்ன சொல்வது? பாடவும் பேசவும், குரல்—பிச்சை வாங்கி நடிப்பவர், உண்மையாக 'கலை'க்குத்தான் பாடுபடுகிருர்களா என்று ஒரு குரல் அழத்தான் வேண்டி யிருக்கிறது.

எங்கள் வீடு ஒரு மிருகசாலை. ஏனென்ருல் ஒவ்வொருவர் குரலும் ஒரு மிருகத்தைத்தான் ஞாபகப்படுத்தும். 'நாய் குலைக்கிறது' என்ருல் தாத்தா பேசுகிருர்.......'சிங்கம் உறுமுகிறது' என்ருல் அப்பா கத்துகிருர்...... 'பலி ஆடு கதறுகிறது' என்ருல் அம்மா யாருடனே வம்பு பேசுகிருர்....வந்து....வந்து மான் கத்துகிறது என்ருல் சாட்சாத் என் சகதர்மிணிதான் பேசுகிருள் (ஆம்!.... அவளை 'மான்' என்று அழைப்பதில் தான் எத்தனை திருப்தி அவள் குரலில் தொனிக்கிறது!) 'கட்டுரை மோசம்' என்று நீங்கள் குரல் கொடுப்பதற்குள் நான் நிறுத்திவிடுவது உத்தமம் அல்லவா?

மாதவிடாய் நின்றுபோனதா?

"தேவி பில்ஸ்"

"மாதவிடாய்" வேதனைகளால் அல்லல்படும் பெண் குலத்திற்கு ஓர் அரிய சந்தர்ப்பம். பெரிய

சாதனை. ஸ்திரீகளுக்கு மாதவிடாய்காலத்தில் வலி, மாதவிடாய் தடைப்பட்டோ, மாதவிடாய் நாள்பட்டோ ஏற்படும் இத்தனைவித கோளாறுகளுக்கும் அரிய சேவை, எளிய நடையிலே ஆற்றுகிறது தேவிபில்ஸ். நாட்டிற்கு தேவி பில்ஸ் ஆற்றும் சேவையை பெண்குலம் எம்மைப் போற்றுகிறது.

சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டு, மத்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டு மக்களின் மாண்பைப் பெற்றது **"தேவி பில்ஸ்"**. பெண் குலத்தின் துயர் துடைக்கும் ஓர் உறுதுணை.

நாள்பட்ட கேசுகளுக்கு, ஒரு கோர்ஸுக்குப் போதுமான ஒரு பாக்கெட் 14 மாத்திரைகள் கொண்ட ஸ்பெஷல் (Special) மருந்தின் விலை ரூபாய் 10-8-0 (Ordinary) மருந்தின் விலை ரூ. 8-8-0.

தபால் செலவு தனி.

விபரங்களுக்கு விண்ணப்பிங்கவும் :—

SEENU & Co.,

Post Box No. 1638 (1) Madras-1.

Branches :

136, Serangoon Road,
Singapore-8

4, Jalan Maharani,
Muar (Malaya).

Agents:

New Colombo Medical Stors,
82, Main Street, Colombo-1.

City Medical &
General Agencies,
89, Chickpet,
Bangalore City.

இலக்கியச் செல்வங்கள்



வாழ்வு குலைந்து வளமிழந்து தாழ்வு மிகுந்து கிடக்கும் இன்றைய தமிழனின் நிலையைக் காணும்பொழுது நெஞ்சம் துணுக்குறுகிறது. கண்கள் நீர் பிலிற்றுகின்றன. துயரம் தாள முடிவதில்லை, வெறும் வார்த்தைகள் அல்ல இவை. உள்ளத்தினின்றெழும் உணர்ச்சிப்பெருக்கு!

பழந் தமிழன் தான் வாழ்ந்த பொற்காலத்தைக் கலையிலும் காவியத்திலும், சிலையிலும் சித் ரத்திலும், வடித்து வைத்திருக்கிறான். வானளாவிய கோபுரங்களிலே அவன் கைவண்ணமும் கலைத்திறனும் வாய் திறந்து பேசுகின்றன. கவிதை பேசும் கற்சிலைகள் இழந்துபோன பழைய வாழ்வை நினைந்து நினைந்து நெடிதுயிர்க்கச் செய்கின்றன. வண்ணம் குலையா ஓவியங்கள், வாழ்வு குலைந்து போன தமிழனுடைய நெஞ்சிலே தணியாத தீயை மூட்டி விடுகின்றன. இன்று தாழ்ந்து கிடக்கும் நிலையிலே வாழ்ந்த காலத்தைப்பற்றிச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தை அழிவதோடு தமிழன் நின்றுவிடப் போவதில்லை. தன் வாழ்வையும் சிறப்பையும் அவன் மீண்டும் அடைவது உறுதி! அந்த எழில் மிகுந்த பழமைச் சிறப்பு தமிழ் மக்களின் இன்பக் குறிக்கோளாக இலங்கட்டும் என்பதற்காகவே அவற்றை நினைவு கூட்டுகிறோம்.

கல்லை, மனித உணர்ச்சி கொண்டு பொங்கவைத்த தமிழன், காவியத்தில் என்னென்ன செய்திருப்பான் என்று கூறவேண்டியதில்லை. அழகிய ஓவியங்களைப் பார்த்திராத ஒருவனை அஜந்தாக் குகைக்குள் அழைத்துச் சென்று நிற்கவைத்தால், காலத்தின் கைகளால் களங்கப் படுத்தமுடியாத அந்த உயிர்ப் பிம்பங்களைக் கண்டு எவ்வளவு உணர்ச்சி பெறுவானோ, அவ்வளவு உணர்ச்சியால் துடிக்கிறது உள்ளம், தமிழனின் பழம் காவியங்களின் நலனைப் பருகப் பருக. உள்ளம் குதிக்கிறது; கொம்மாளமிடுகிறது!

இலக்கிய உலகம் இதயத்தைக் கவர்வதொன்று. அதிலும் தமிழன் படைத்து வைத்திருக்கும் செல்வங்களின் சிறப்பை என்னென்று சொல்வேன்! என்னென்று சொல்வேன்!

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் பத்துப்பாட்டைப் படிக்கத் தொடங்கினேன். வாயில் வைத்துச் சுவைக்கச் சுவைக்க இனிப்பும், இன்பமும் தரும் ஒரு தின்பண்டம், தேனின் சுவையும், நறுநெய்யின் மணமும், கமழ்ந்து கொண்டே இருக்கும்படிச் செய்யப்பட்ட ஒரு தின்பண்டம்

எத்துணை இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்குமோ அத்துணைப் பெருமகிழ்வும் பேரின்பமும் அடைந்தேன்.

பத்துப்பாட்டு

இந்தப் பத்து ஆண்டுகளிலும், வாழ்க்கையில் வந்து மோதிய எத்தனையோ, இன்ப துன்பங்களிலும் ஏற்றத் தாழ்வுகளிலும் அழியாது கிடக்கும் அந்தச் சுவைதான் "பொன்னியின் செல்வர்களே! வாரீர்!! வாரீர்!!! வந்து சுவை காணீர்" என்று அழைக்கத் தூண்டியது.

காவியத்தைக் கையில் எடுத்துக் கொண்டவுடன் இந்த உலகம் நம் கண்முன்னிருந்து மங்கி மறைந்து போகிறது. ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளைப் பின்னேக்கிக் கடந்து ஓர் உயிருள்ள, அழகான, பழைய சமுதாயத்தினிடையிலேயே சென்று சேர்ந்துவிடுகிறோம். அடடா! பழந்தமிழ்ப் புலவன், தான் வாழ்ந்த சமுதாயத்தை எத்துணை அழகாகப் படம்பிடித்து வைத்திருக்கிறான்!

ஆறுகளும் அருவிகளும் தவழ, அவற்றால் அவனி எங்கும் கழனிகளும் நிலபுலங்களும் விளைய, மரங்களும் மலர்வனங்களும் நிறைந்த இன்பப் பூஞ்சோலை போன்ற ஒரு நாட்டிலே அன்பு கெழுமி வாழ்ந்த எளிய உள்ளத்தவரான மக்களை நாம் காண்கிறோம். அந்த நாடும், அவர்களின் வாழ்க்கையும் அந்தக் காவியங்களில் அழகுறச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

அவர்களின் வாழ்விலும் இன்பதுன்பங்கள் இருந்தன. வறுமையும் கொடுமையும் இருந்தன. அவற்றையும்தான் எத்துணை அழகுறப் பாடி வைத்திருக்கிறான் தமிழ்ப் புலவன்!

பத்துப் பாட்டிலே, நல்லிசைப் புலவர் நக்கீரனார் முதலிய எண்மர் பாடிய பத்துப்பாடல்கள் உள்ளன. அவைதாம் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு,

பட்டினப்பாலை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) என்பவையாம். இவற்றுள் முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை என்பன மூன்றும் அகத்திணையின் பாற்படுவன. ஏனையவற்றுள் ஐந்து ஆற்றுப்படையின் பாற்படுபவை.

சிறுபாணாற்றுப்படை

ஆற்றுப்படை என்பது, பரிசில் நாடிச்செல்லும் பாணன்ஒருவனைப் பரிசில் பெற்றுவரும் பாணன் தனக்குப் பரிசில் ஈந்த வள்ளலார் வாழும் நாடு நோக்கி வழிப் படுத்தும் முறையில் அமைந்த நூல் ஆகும். (ஆறு - வழி. படை - படுத்தல்)

பரிசில் பெற்றுவரும் பாணன்,பெறக் கருதும் பாணனை வழிப்படுத்துவதாக அமைந்த பாடல்கள்இரண்டு. ஒன்று சிறுபாணாற்றுப்படை. மற்றது பெரும்பாணாற்றுப்படை.

இசைக்கருவிகளிலே யாழ் மிகவும் சிறப்புடையது பண்டைத்தமிழ் யாழ்தான் பல நாட்டு மக்களின் இசைக் கருவிகளுக்கும் தாய்மைப் பேறுடையது என்பது அறிஞர் துணிபு. தமிழ்நாட்டில் ஏழுவகை யாழ்கள் பழக்கத்தில் இருந்தன. அவற்றில் சில நரம்புகளை உடைய, சிறிய உருவினதாகிய சீறியாழ் என்பதும், பல நரம்புகளும் பெரிய வடிவமும் உடைய பேரியாழ் என்பதும் இரண்டு. சீறியாழ் மீட்டிய பாணர்க்கு சிறுபாணர் என்றும் பேரியாழ்ப் பாணர்க்குப் பெரும் பாணர் என்றும் முறையே பெயர்கள் வழங்கி வந்தன. சிறுபாணனை ஆற்றுப்படுத்துவது சிறுபாணாற்றுப்படை என்றும் பெரும்பாணனை ஆற்றுப் படுத்துவது பெரும்பாணாற்றுப் படை என்றும் இவ்விரு நூல்களும் பெயர் பெற்றன. அன்றியும் அளவில் சிறியதாகிய பாணாற்றுப்படை சிறு பாணாற்றுப்படை, பெரியதாகிய பாணாற்றுப்படை பெரும் பாணாற்றுப்படை என இப்பாடல்களின் அடிகளை அளவாகக்கொண்டு இப்பெயர் பெற்றன எனக் கொள்ளலும் பொருந்தும்.

சிறுபாணாற்றுப்படை ஓய்மாநாட்டு நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீளும் பாணன் ஒருவன் வழியில் சந்தித்த வேறொரு பாணனை அவனிடம் ஆற்றுப்படுத்தியதாக அமைந்தது.

நல்லியக்கோடன் நாகருள் ஒரு பிரிவாகக் கருதப்படும் ஓவியர் குடியைச் சேர்ந்தவன். இவனது ஊர் **கிடங்கில்** என்பது திண்டிவனத்தைச் சார்ந்தது. திண்டிவனமும் சுற்றுப்புறக் கிராமங்களும் சேர்ந்த பெரிய நகரமாகக் கிடங்கில் ஒரு காலத்தில் திகழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இப் பாடலில் வரும் வேலூர், ஆமூர் முதலியவை தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவை. இவன் பேகன் முதலிய எழு பெரும் வள்ளலார்க்கும் பிற்காலத்தவன் என்பது இப் பாடலால் விளங்குகிறது.

இப் பாடலை இயற்றியவர் **நத்தத்தனார்** என்பவர். தத்தனார் என்பதே இவருடைய இயற் பெயர் என்றும் **நல்** என்பது நக்கீரர், நச்செள்ளையார் என்பவற்றில் போல சிறப்பின் அடைமொழியாகச் சேர்க்கப்பட்டிருக்கக்கூடும் என்றும் கருதலாம். இவர் தம் நாடாகிய **இடைக்கழி நாடென்பது** சென்னைக்குத் தென்மேற்கிலுள்ளது. உப்பங்கழிகளுக்கிடையில் இருந்தமையால் இது இப் பெயர் பெற்றிருக்கக்கூடும்.

பாடலில் இளவேனில் முதுவேனில் பருவச் சிறப்புகளும், விறலியின் அழகு விளக்கமும், முடியுடை மூவேந்தரின் இயல்பும், தமிழ் வள்ளலார் எழுவரின் கொடைப் பண்பும், முல்லை மருத நிலங்களின் இயல்புகளும் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன. பாணனின் வறுமை பற்றிய விளக்கம் உள்ளத்தை உருக்குகிறது. நல்லியக்கோடனின் கொடைச் சிறப்போ நெஞ்சம் நெகிழ்வுறச் செய்கிறது. பத்துப் பாட்டிலேயே இத் துணைச் சிறப்பும் ஒருங்கே பொருந்திய பாடல் இது ஒன்றே எனலாம்.

சிறுபாணாற்றுப்படையைச் செந்தமிழ்ச் செல்வர்கள் அறிந்து உணர்ந்து அமிழ்தெனச் சுவைக்கப் பொன்னியின் வாயிலாக நமது அன்பரும் தமிழகம் அறிந்த பெரியாருமாகிய ஒருவர் அள்ளித்தரப் போகின்றார் அடுத்த இதழ் முதலாக. அள்ளிச் சுவைத்து அகமகிழ வேண்டுகின்றோம்.

எட்டடுக்கு மாளிகையிலே ஏற்ற வாழ்வு பெற்றிருக்கும் ஏகாம்பரர் வெளி உலகிற்கு ஏதும் தெரியாதவராக—கள்ளச் சந்தையை மறைக்கக் கடவுள் பக்தராகக் காட்சியளிப்பது—காரிய உலகவாதிகளை மிஞ்சிடும் ஒன்று, அவரின் நடிப்பு! நல்ல நிலை அதுதான் ஒருவனே பெற வேண்டும் என்ற 'சுயநலம்.' பல சூதுத் திட்டத்தைத் தீட்டி சுயவிளம்பரத்தில் முதலாளியாகி முன்னுக்கு வந்தார்....முன்னேற்றம் கண்டது வரவேற்க வேண்டிய ஒன்றுதான்; (ஆனால்) பின் நிலையில் உள்ள லட்சோப லட்ச மக்களை, எண்ணுந்தோறும் அது ஏற்ற வாழ்விலே எல்லாம் பெற்று 'எழில்' வாழ்வு' வாழ்வோரைக் கண்டதும் மனப்புரட்சி செய்கிறது! மனப்புரட்சி மாறி செயல் புரட்சிக்கு கீழ் நிலையில் உள்ளோர் இன்று தயார் செய்யப்படுகிறார்கள்! அந்தத் தயாரிப்பு எந்த நாட்டு ''மாடலோ'' நாமறியோம்!!.... ஒன்று மட்டும் உண்மை அது எந்த நாட்டு மாடலாக இருந்தாலும் விதிவிலக்கல்ல........

''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால்
ஓர்நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர்
எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்
உணரப்பா நீ''

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

........ஆம், புரட்சிக் கவிஞரின் புத்தகமும் அன்று புன்னகை பூக்கும்! அந்தப் புன்னகையிலே பூரிப்பு வாழ்வு பெற்று வாழ்வோரைப் புதியபாதைக்கு அழைத்து வரும்! இல்லை..........அழைப்பு விடுக்கும்!! அழைப்பை அவர்கள் ஏற்க மறுத்துவிட்டால்...... அந்தப் புரட்சியிலே........அழிவிலே யார் யாரின் குருதி தாயகத்திற் பாய்ந்து நாட்டின் மண்ணை சிவப்பு செய்திடுமோ?.......அறியோம்!

அந்தச் சிவப்பு—செழுமை பெறத் தேவைதானு? சிவப்பு... சிந்தாமல் சீர் பெறக்கூடாதா?....கூடும்! ஆனல், அந்தப் பாதையை அவர்கள் விரும்பவில்லை! அது ஏனெனில் என்றும் "பா" சக்தியால் வெற்றி கண்டவர்கள் இந்நிலையிலும் வெற்றி காணுவோம் என்ற ஆசையால்! "ஆசை வெட்கமறியாது" என்ற பழமொழி எதற்கோ நாமறியோம்!....அந்த பழமொழிக்கே பாதை வகுத்த பணம் படைத்தோர்—பதைத்தே போவர்!

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி

வரவில் வழிந்தோடும் பணம். அது பணம் படைத்தோருக்கு பல மாறுதலைச் செய்கிறது........ தேவையை மிஞ்சிடும் அளவுக்குப் பெற்றிடும் 'பாக்யவான்களில்' நமது ஏகாம்பரரும் ஒருவர்!

மாளிகை வாசம்!—நல்ல அமைப்
புடன்; வசதிகள் கூடியது.
"வாக்ஸால்" கார் சொந்தத்தில்—
சொகுசு வாழ்வுக்கு!
பல நிர்வாகத்தின்—பாகஸ்தர்
நிலம் நீர் இல்லாக் காலத்திலும்
அது பெருகி வருகிறது!
வட்டி(யில்) மூலம் வரும் வரவே
அவர்கள் வாழ்வுக்குப் போதுமானது!

இவைகள் அனைத்தும் ஒருவருக்கு....ஒரு குடும்ப நலனுக்கு இருக்கப் பெற்றுல், இதனல் பாதிக்கும்....அழிந்துவிடும் குடும்பங்கள் எத்தனை?

ஒதுக்கிடம் ஓட்டையும் ஒடைசலும் கூட இல்லை, குப்பை மேட்டை குந்த இடமாக்கி அதிலே குடிசை போட்டு வாழ்ந்து கொள்ள அதிகார வர்க்கம் அனுமதி தந்தது!—அவர்களின் அனுமதி தரும் அளவுக்கு இடத்தை "ஆக்குபை" செய்து விட்டார்கள் அனைவரும்! குப்பைமேடுகளாவது 'பொது உடமையாக' இருப்பது இந்நாட்டின் பெருமைக்கோர் விளக்கம்.

குப்பன், குந்த இடம் நோக்கி குடிசை வாழ்வு பெற்றவன்! அவன் மட்டுமல்ல. அவர்களின் பல தலைமுறையின் பரம்பரைக்கே—குடிசை வாழ்வுதான்! இன்று அவன் குடும்பமல்ல; ஒருவன்! அவன் தங்கு மிடத்திற்கு ஒதுக்கிடமில்லை; குடிசை!!

அன்று காலையிலே குப்பன் 'கூலி' ஏதாகிலும் கிடைக்காதா? என்ற எண்ணத்தில் கடைத்தெருவில், வலம் வந்தான்! ஏக்கத்தில் வலம் வருபவனுக்கு ஏதாகிலும் கூலி வரவுகள் பெருகினல் அவன் மாலையில் மகிழ்ச்சியோடு குடிசை காணுவான்! மற்ற நாளில் மகிழ்ச்சி, அது அவன் முகத்தில் காணக்கூடாததாய் இருக்கும்! இருந்தும் இனிய மனப் பண்பு மட்டும் அவனிடமிருந்து மறைந்திடவில்லை!! நடு வீதியின் ஒதுக்கலில் குந்திக் கூடைச் சோற்றை உண்டு அவன் என்றும் இல்லாப் புதுமையாக பகல் உழைப்பை பார்க்காமல் தங்கு மடத்தை எண்ணி நடந்தான்!—குடிசை கண்டான்—ஏனே!

பரிதியின் பட்டொளி அவனுக்கு பகல் நிலவு! பகல் நிலவின் குளுமையில் குடிசை கண்டவன் படுக்கைக்கு உடலைக் கீழ் சாய்க்கும்போது பக்கத்துக் குடிசையில் தோழமை கொண்டிருக்கும் ஆரோக்கியசாமியின் அருமை

'அண்ணு' என்று உள் நுழைந்த மேரி "கடந்த இரண்டு நாட்களாக சோறு கஞ்சியில்லாமல் அம்மாவும், குழந்தையும் படுத்த படுக்கையில் பேசவும் சக்தியற்று இருக்கிருர்கள். இந்த இரண்டு நாளாக நீர் ஆதாரத்தில்

மகள் மேரி "அண்ணு" என்று அழைப்பு விடுத்து அவன் அனுமதியின்றி உள் நுழைந்தாள்!

இளமை தரும் இன்பம்—மேரியின் கட்டுடல்! அவளைக் குப்பன் பார்க்கும்போதெல்லாம் இருவர் விழிகளும் "பேசும் படமாக" ஓடும்! இளமை தரும் விருந்து அது இருப்புக்கொண்ட இடத்தை விட இல்லாதாரிடம் 'மேக்கப் பில்லாமல்' மேன்மை கொண்டிருக்கிறது என்பதற்கு அவளோர் அறிவிப்பு!

ஒரு வேளை உணவுக்கும் முகாரி பாடிடும் குடிசை வாழ்விலே இருந்ததைப் புசித்து, இல்லாத போது நீரையுண்டும் அவள் நிலையிலே குறையாமல் குதூகல மங்கையாகக் காட்சி தந்திட எப்படி முடிகிறது? .... இந்தக் கேள்வி நிலைக்குத் திகைப்பையூட்டிடும் கட்டுடல் அவள்பால் அவன் காண முடிந்தது!

உயிரைப் பிடித்திருக்கிருர்கள்! அப்பாவோ — வரும்படியில்லாமலும், உணவில்லாமலும் பிழைப்பைத் தேடியலைந்து வருகிருர் .... தயவு செய்து இன்றைய உணவுக்கு ஏதாகிலும் வழிசெய்தால் —நன்றி மட்டுமல்ல, அந்தக் கடனையும் பின்....கொடுத்து விடுகிருேம்'' என்று கூறியதும் அதைக் குப்பன் தன் சிந்தனையுலகில் .... கண்டு, கண் வழியாக நீர் பாய்ச்சுகிருன்! அன்று கூலி வரவில் குப்பனுக்கு இரண்டு நாட்களுக்கு நிறைவு கண்டதால் அவன் உணவை முடித்துக்கொண்டு குடிசையைக் காண முடிந்திருந்தது!....கண்டவன் காதில் களிப்புச் செய்தி பட்டிருந்தாலும் பரவாயில்லை. ஆனுல் அது கண்ணீர் கண்டிடச் செய்துவிட்டது! ', ஏழைகள் கண்ணீர்.......அழிக்குமாம்!'' ஆனுல் இன்ருே அவர்களையே அது அழித்து விடுகிறது!! கண்ணீர் சிந்தவும் கூடா

தவர்களும் உண்டு!—மாறிச் செந்நீராகச் சென்றதால்!! குப்பன் கண் வழியே நீர் ஓடக் கண்ட மேரி குந்தியழத் தலைப்பட்டாள்! அவளை அருகணைத்து ஆறுதல் கூறும் குப்பனின் அணைப்பிலே; உணர்ச்சி ஒன்றும் காணக்கூடாதது!

ஆறுதலுக்கு அன்பு மொழி பொழிந்தவன் அவள்பால் ரூபாய் ஒன்றை அளித்து உணவு சமைத்து உண்ணக் கூறியதும்—பெற்றுக்கொண்ட மேரி அடுத்து உணவுக்கு அரிசியும், சுள்ளியும் தேடப் புறப்பட்டபோது அவன் மறுபடியும் மந்த நடை போட்டான். கூலியுலக வாழ்வை நோக்கி!

* * *

கடைத் தெருவில் கார் ஒன்று வந்து ஓர் கடை முன் நிற்கிறது! அதில் இருந்து ஒருவர் கடை சென்று தேவையைப் பெற்று அதனை வண்டியில் சேர்ப்பிக்க "கூலியைக் கூப்பிடவும் குப்பன் "ஏனுங்க சாமி!" என்று ஓடி வரவும் "அதெல்லாம் வண்டியின் பின் அறையில் அடைத்து வை" என்று கூறியதும் பொருள்களை ஒழுங்குபட எடுத்துக் குப்பன் காரின் பின் அறையில் அடக்கிவிட்டு அடக்கமே உருவாய் கூலியை எதிர்பார்த்து நிற்கும் போது....

கூலியின் கட்டுடல்—பணவாதியைப் பரவசப்படுத்தவில்லை! அவன் உடலில் இருந்து உழைப்பை உருவாக்கி மாளிகையைச் சுற்றி மணக்கும் மல்லிகைகளையும், இனிக்கும் கனி மரங்களையும் கண்டிடச் செய்து....ஏன் அவனையே காவல் காப்போனாக ....நாய் இருக்க வேண்டிய இடத்தில் அந்த நடை....! நிச்சயம் பாதுகாத்துவரும் என்ற நம்பிக்கையில்....

"டேய், உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"குப்பன் சாமி!" ....கூலி

"குறும்பன் அல்லவே?" .... அவர்!

"இல்லை, சாமி!" கூலி கூறியதும், அவர்....

"இதோ, அந்த இடத்திற்கு வந்து சேர்" என்று ஒரு காகிதத்தில் அவரின் மாளிகையின் இடத்தை எழுதி அவனுக்களித்து விட்டுக் காரில் அவர் உட்கார்ந்ததும் "கூலிங்க சாமி!" ....குப்பன் நினைவுபடுத்தவும்....

"கூலி—அங்கு வாடா கொடுக்கிறேன் எனக் கூறிவிட்டு காரை ஓட்டிச் சென்றுவிட்டார். வேறு வேலைகள் வேண்டிய அத்தனை அங்கு இருக்கும் என்ற எண்ணத்தில் குப்பன் அந்தப் பணவாதியின் பங்களா மூன்று மைலில் இருப்பதை அறிந்து ஆத்திர நடை நடந்து மாலை நான்கு மணிக்கு நம்பிக்கை முனையடைந்தான்!

மாளிகை வாசலில் நின்று கொண்டே குப்பன் "சாமி" என்று குரல் கொடுத்தான். "யார் அது?" என்று அவர் வெளியில் வரும்போது அந்தக் கூலி நின்றிருப்பதைக் கண்டவர்,

"டேய், உனக்கு செடிகள் நட்டு—செழிப்புடன் வளர்க்கத் தெரியுமா?" என்று கேட்க, அதற்கு அவன்—

"தெரியும் சாமி!" எனப் பதில் கொடுத்தான்.

"சரி, நீ இங்கு மிச்சமாவதை உண்டு, மாளிகை செழிப்புடன் விளங்கச் செடி, கொடிகள் நட்டு—

நீர்விட்டு வளர்ப்பதும், பின்னல் உள்ள கார் செட்டின் அருகில் அடித்திருக்கும் குடிசையில் இரவில் தங்குவதின்மூலம் அந்த மாளிகையைக் காவல் காத்துவரவும் செய்யவேண்டும். இதை நீ ஒழுங்காகச் செய்து வருவதாய் இருந்தால் உனக்கு மாதச் சம்பளம் சாப்பாடு போக இருபது ரூபாய் தருகிறேன்; சம்மதமா?'' என்று அவர் கேட்க, கூலி........

"இதுவரையில் மாதச் சம்பளத்தில் நான் வேலை செய்யவில்லை சாமி! இருபது ரூபாய் கட்டி வராதே எனக்கு" என்றான் அதற்கவர் — "முதலில் உனக்கு ரூபாய் இருபது சம்பளமும், வேலையில் திருப்தியாக இருந்தால் மேல்கொண்டும் கொடுக்கப்படும்'' எனக்கூறியதும் "சரிங்க சாமி! நாளைக் காலையில் வருகிறேன்'' என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டு வீட்டை நோக்கிக் குப்பன் குதூகல நடைபோட்டான்.

குப்பன் கொடுத்த காசில் பகல் நான்கு மணிக்கு பாதி வயிற்றைப் பதம் பார்த்தவர்கள்; அவனைப் பாராட்டக் கடமைப்பாடுடையவர்கள் அல்லவா?........ அதோ மாலை குப்பன் குடிசையைக் கண்டதும் மேரி அவன்பின் உள் நுழைந்து "நீங்கள் அளித்த காசில் அரை வயிற்றுக் கஞ்சியாச்சு — நன்றி கூறுகிறேன் அண்ணா!''— அந்த ஆவல் காட்டும் முகத்தாள்; நன்றி கூறி, 'அண்ணா' என்றபோது அவன்— குப்பன் அவளை அருகணைத்து ஆசை முத்தம்—ஆயிரமல்ல; ஒன்று வைத்தான்!—நன்கு பதிய வைத்தான்!! அவள் ஒடுங்கினாள்; ஓடவில்லை!

குறும்பனின்—இல்லை, இல்லை: குப்பனின் குறும்பு அவளை குந்தி அழுதிடச் செய்யவில்லை; ஆனந்தத்தால் அவளின் அழுகை —மேலான ஒன்றாக்கி விட்டது. அவன்—கைப்பிடியை விடவில்லை —"மேரி!'' அது அவன்.

"........?'' அவன், அவள் முகத்தைப் பார்த்தவாறு,

"நாளைக் காலைமுதல் கூலி குப்பனல்ல இவர்!..........யார் தெரியுமா?'' அவன். (குப்பன்)

"........!'' பதிலில்லை. அவளுக்கு அதிசயமதிகமாயிற்று.

"இதோ இந்தக் குடிசையை நான் இன்றுடன் கைவிடுகிறேன். இனி நாளை முதல் குடிசை கனவுலக வாழ்வு! நினைவிலே மாளிகை வாசம்!!''........

"என்ன?..........என்னையுங் கூடவா கனவுலகில் சேர்த்துவிட்டீர்கள்? உங்கள் பேச்சு எனக்கு ஒன்றும் புரியாத புதிராக இருக்கிறதே?''....மேரி, கண்ணீருடன்.

"மேரி! நான் குடிசை வாழ்வை மறந்தாலும், என் உள்ளமே!..... உயிரே! உன்னை மறந்திடக் கூடுமோ? நான் மறக்கக் கூடாதது—உன் மதிமுகம்!—அவன் (குப்பன்.)

"பேச்சிலே பெருமை கூட்டிவிட்டீர். ஆனால் செய்கையில்....?'' —மேரி.

"பயித்தியக்காரி நீ! பெருமை பேசிப் பேதைப் பெண்களை வேட்டையாடுபவனல்ல நான். நமதுலகக் (ஏழைகள்) காதல் தெய்வீகமானதல்ல! — அன்பு கொண்டது!! உலகில் காணக் கூடாதது! இந்நிலையில் பூக்கும் காதல்''—குப்பன்.

"........கருகிய மலரானால்?'' —மேரி.

> மாறுதல்—அவ்வளவு சுலப மானதா? கதை ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப்போல் கற்பனையில் தான் நடக்க முடியும். ஆனால், கதையின் வேறு அம்சங்களுக்காகவே இங்கு வெளியிடப்படுகிறது
>
> —ஆ. ர்.

"கண் குற்றமல்ல -கருத்துத் தடுமாற்றம்! கருகிய மலர் நமதுலகில் புதுமையானது! ஆனால் மலரைச் சில மடையர்கள் கசக்கி விடுகிறார்கள்! அதுகூடப் பெருமளவுக்கு இல்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது"—குப்பன்.

"...கூறலாம். நடச்கும்போது கூற்றுக்கு மாறுபட்டு இருக்கும் போது அல்லவோ குற்றவாளிகளைக் காணமுடிகிறது?....கண் கெட்டபின் 'சூர்ய நமஸ்காரம்' —கேலிக்கூத்து!"

"நல்லதோர் நிலைதனை வாழ்வில் ஏற்று நடந்துகாட்ட விரும்புபவன் நான். மேரி! நீ சூதர்களின் பாதையை நினைவு கூறும் அளவுக்கு நல்லோர்களின் வழியை நினைக்கவில்லை!........நீமட்டுமல்ல உன் நிலைமையில் பலர் இருக்கும் காரணத்தால்தான் — நம்பிக்கை முனையை நாசமாக்கிடும் நயவஞ்சகர்கள் காதல் உலகில் 'உலவ' வருகிறார்கள் போலும்!......அஞ்சாதே! சிறிது நாளில் என்னில் உன்னை ஐக்யம் காணுகிறேன். உன் மகிழ்ச்சி முகத்தில் குறுநகைப்பு செய்து விடையளித்து விடு........!" —குப்பன் நகைத்தான்.

அவள் சிரிக்காமல் சிரித்துத் தலையாட்டும்போது அவன் அதனைத் தாங்கி அவளின் இன் முகத்தில் "இச்சிட்டான்! அவளோ" உம்....என்று ஓடிவிட்டாள்!

அன்றிரவு ஆரோக்யசாமி குடிசை கண்டு அந்த இன்பச் செய்தியைச்கூறி நாளை முதல் 20 ரூபாய் மாத வரவும், இரண்டு வேளை உணவும் என்று அவன் அறிவித்ததும் அது ஆரோக்ய சாமிக்கு ஆனந்தத்தை அளித்து "ஒரு வழியாக ஆகிவிட்டாய் இனி நீ ஒரு கவலையுமின்றி வாழலாம்.........ஏதோ எங்களை மறந்திடாதே!....அவ்வப்போது வந்து போயிட்டு இரு......அதனால் நீ பக்கத்தில் இல்லாத நிலைசரிக்கட்டி வந்து, நம்ப, நட்புந்நீடித்து வரும் பாரு...............என்று கூறி வாய் மூடியதும், குப்பன் அனைவரிடமும் விடை பெற்று—மேரியிடம் ஒரு ரூபாய் அளித்தவாறே "மேரி இந்தா! இந்த ஒரு ரூபாயை வைத்துக் கொண்டு நாளை விருந்து சமைத்துச் சாப்பிடுங்கள்!" என்றதும் மேரி...."எதற்கண்ணு விருந்து?" என்றாள். "நாளைப் புதுசா வேலைக்கு போறேன் பாரு........ அதற்காக நீங்களும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டாமா? என்று குப்பன் கூறியதும், மேரி நகைத்தபடி "நீங்கள் இல்லாமலா விருந்து?" என்றாள். அதற்கு அவன் "இந்த விருந்தில் நான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. நீங்களே பங்கு கொண்டால் போதும். ஆனால், அந்த விருந்தில்...." என்று அவன் கூறி வரும்போது, அவள் இடைமறைத்து "சரியண்ணு!.... எங்களை மறந்திடாதீர்கள்" என்றாள். "இனி மறந்திடப் போமோ...." என்ற சுந்தராம்

பாள் பாடலைப் பாடிக் கொண்டே "வருகிறேன்; வணக்கம்'; என்று அடுத்த குடிசைக்கு நடை போட்டான்.

* * *

வெறும் நிலத்தில் நின்றிருந்த அந்த மாளிகையைச் சுற்றி மணம் தரும் மலர்ச் செடிகளும், அழகு தரும் பூங்கொடிகளும்; பசுமை தரும் புல் தரையும்—பார்க்கப் பரவசத்தை மட்டு மல்ல...."பாக்யம் பெற்றோர்" பலனுக்கு அது பாதை வகுத் திடக்கூடுமோ? என்று எண்ணும் படியாக நல்லதோர் பூங்காவைச் சமைத்து விட்டான்!

கடந்த நான்கு மாதத்தில் அவனின் உழைப்பை—மாளிகை யைச் சுற்றியுள்ள நிலத்தில் செலுத்தி அங்கு செழுமையை உண்டாக்கினான். நிறை உழைப்பு நிம்மதி கொண் டோருக்கு அளிக்கும் "அருமை வாழ்வும், ஆனந்தமும்" எப்படி ஏழைகளை குடிசைப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது என் பதை அறிந்தான்! உழைப்போர் களின் அறுவடையில் பூக்கும் 'அருமைகளை' அவர்கள் அனு பவிக்க நாம் உழைத்துச் சாகத் தான் வேண்டுமா?....பக்தி மார்க் கத்தில் 'நல்ல காலம் வராதா?' என்று ஆண்டவனை அழைத்து "குறை தீர்ப்பீர், ஐயனே!" என்று வேண்டி 'ஐயனின்' பதில் வருமுன் பரலோகத்தையடையும் பக்தர்கள் நிலை நீடிக்கும்போது 'உழைப்பிலே !சமம்! பலனிலே; பங்கு!' என்ற பாதையிலே, தன் பகுத்தறிவைப் பயன் படுத்தும் 'பலன் காணுதவர்களை' இந்நாடு எப்போது பெற்றிடக்கூடும்?....

ஒருநாள்!

"வணக்கம் ஐயா!"—அது குப்பன்.

"என்னடா!"....அவர். அதா வது மாளிகை வாசியான ஏகாம் பரர்!

"நான் வேலைக்குவந்து இன்று டன் நான்கு மாதங்கள் நிறைவு கொண்டன!"—குப்பன்.

"நான்காவது மாத நிறைவு விழாக் கொண்டாடப்போகிறீர் களோ?"—ஏகாம்பரர்.

"நான் வரும் மாதத்தில் திரு மணம் செய்து கொள்ளப்போகி றேன்.......நீங்கள் கூறியது போல்"—குப்பன்.

"நான் எப்போதடா உன்னிடம் நாளது மாதத்தில் உன்னைத் திரு மணம் செய்து கொள் என்று கூறினேன்?"—ஏகாம்பரர்.

"திருமணத்தைப் பற்றி யில்லிங்க; சம்பளக்கூடுதல்...."

"..............!"

குப்பன் சம்பள உயர்வை நினைவு படுத்தியதும், ஏகாம்பரர் அதிசய மனிதராகி விடை கூருமல் இருக்கும்போது, அது குப்பனின் நம்பிக்கையை நாசப் படுத்தி விட்டது. இருந்தும் அவன்...." வேலையைப் பார்த்து கூடுதல் சம்பளம் தருவதாகக் கூறினீர்களே?"

"இப்பொழு தென்னடா அவ சரம்..........பார்த்துக் கொள்ள லாம்"

"இல்லிங்க........"

"என்னடா, இல்லிங்க—?"

"அதாவது...."

"என்னடா, அதாவது?

"சம்பளத்தை தெரிஞ்சுக் கிட்டா, நாளையே "வெற்றிலே பாக்கு மாத்திடலாம் என்று...."

"அதனல் வரும் மாதத்தில் இருந்து இரண்டு பேர் சம்பளம் தேவை என்கிருயா?"

"இல்லிங்க...."

"மறுபடியும் என்னடா இல் லிங்க!"

"ஒரு மாதிரியாக் கூடுதல் செய்யுங்க...."

"ஒரு மாதிரியாகவா?....ம்....ம் சரி பெண் எந்த ஊரு?"

"நம்ப ஊரு தாங்க"

"'நம்ப ஊருதாங்க' என்று என்னையும் உரிமை பாராட்டிக் கொண்டாயே; எதுடா நம்ப ஊர்?"

"இதாங்கோ"

"சரி, பெண் பெயர் என்ன வாம்?"

"மேரி'ங்க"

"என்ன?"

"மேரி"

"கிருஸ்துவப் பெயராக இருக் கிறதே பெண்ணுக்கு?.... நீ இந்து வல்லவா?"

"எங்களுக்கு சமூகம் சதிகா ரர்களின் கூடாரமல்ல — சமரச சன்மார்க்கக் கோட்பாடுங்க .... காதல் தாங்க முக்யம்! சாதிகளை நாங்கள் பார்ப்பதில்லை!"

"ஆங்....காதல் திருமணமோ? நல்லா செய்துகொள். ஆனல், 'காதலே காதலே" என்று, பாடிக்கொண்டு வேலையெல்லாம் மறந்தால்?"

"இல்லிங்க...."

"மறுபடியும், மறுபடியும் இல் லிங்கப் பாடம்....சரி, சரி. எல்லா ஏற்பாடும் செய்துவிட்டு என்னை வந்து பார்" என்று ஏகாம்பரர் கூறிவிட்டு ஏதோ அலுவலை முன் னிட்டு வெளிச் சென்றுவிட்டார்!

அன்று மாலை மந்தகாச நடை போட்டு மறந்துபோன சேரியை நோக்கி நடந்தான். ஆரோக்ய சாமியின் குடிசை கண்டவன்; உள் நுழைந்து மேரியையும், அவ ளின் அன்னை, குழந்தையையும் கண்டான் மேரியைப் பார்த்த வாறு...."அப்பா, எப்பமா வரு வார்?" என்றதும் அவன் "இதோ அம்மாவை அனுப்பி வைத்து, அழைத்துவரும்படிக் கூறுகிறேன்" என்றதும், "அவளின் அன்னையை நோக்கிய படி "அம்மா! அண்ண வந்திருக்கிருர் என்று கூறி, அப் பாவைப் போய் அழைத்து வாம்மா" என்றதும் அவளின் அன்னை வெளி நடந்தாள்! — ஆரோக்கியசாமியை அழைத்து வர!

அந்த நல்ல முகம், கடந்த நான்கு மாதங்களாகப் பார்வை யில் படவில்லை! அவன் பார்வை யிலே ஓய்வு பெற்றிருந்த அந்தப் பால் முகம்—உண்ணத் தெவிட் டாதது!....தடையாக இருந்த அன்னையையும் அவள், அப்பனை அழைத்துவர அனுப்பிவைத்து விட்டாள்! சுதந்திர உலகில் இரு வர் கண்களும் — நான்கு மாதங் களுக்குப் பின் சங்கமமாயின!.... அங்கே, கம்பரல்ல; வள்ளுவர் காட்சி தந்தார்!

கண் — கதை கூறுமோ? கூருதோ?....அறியோம்! ஆனல், அது காதல் செய்யும்! "மேரி! வரும் மாதத்தில் நமக்குத் திரு மணம் நடக்கவேண்டி உனது பெற்ருேர் அனுமதியைப் பெற் றுப் போகவே நான் வந்திருப் பது" என்றதும் அவன் — அவ ளைப் பேசக்கூடாத புன்னகை பூத்திடச் செய்தது! அந்தப் புன்னகை முகத்தில் அவனேர் புதிய அழகு கண்டான்!........

அறிவிப்பு

சந்தா, ஏஜென்ஸி விபரங்களுக்கும், மணி ஆர்டர், போஸ்டல் ஆர்டர், செக் முதலியவைகள் அனுப்புவதற்கும்,

பொன்னி லிமிடெட்
111, பவழக்காரத் தெரு,
சென்னை—1.

என்று குறிப்பிடவும்.

"மாளிகை வாசத்தை நாம் பெற்றிடும் பாக்யமில்லாவிட்டாலும் அதன் நிழலிலாவது நிம்மதி பெற்றிடலாம்........ துன்ப உலகைத் துடைத்து இன்ப உலகில் செல்வதற்கு உன்னை நீ தயார்ப்படுத்திக்கொள்! என்றதும் அவள் இம்முறையும் ஏனோ பேசவில்லை!-'மகிழ்ச்சி! பேசுவதற்கும் தடை விதிக்கக்கூடிய சக்தி அதன்பால் உள்ளதோ? அது உண்டானால்; பேசாமடந்தையானது விந்தையல்ல என்று நினைத்தவனாய் அவன் "பேசும் புறாவே! நீ ஏன் பேசாமடந்தையானாய்? என்று கூறி எழுந்து, அவளை அருகணைத்தவாறு பெருமைகொண்ட உன் முகம் அது அமுத கவசம்! அதனை அள்ளிப் பருகிட வல்ல .... தேனை தேவையை உண்ணப்போகிறேன்! என்று கூறி, அவளின் தாழ்ந்த தலையைச் சரி செய்து உணர்ச்சியில் வயப்பட்டான்; உண்ணத்தலைப்பட்டான்!

அமைதி நிலவியது; குடிசையில்! இருவரும் பேசுவதற்கு முடியாதவர்களாக மாறினர்கள்!—அச்சமோ; ஆனந்தமோ?........ ஆனல், அன்பில் வசப்பட்டோர்களின் வழியே அதுதான்! வெளியில் சென்றிருந்த அவர்களின் அன்னை, ஆரோக்யசாமியை உடன் அழைத்து வந்தாள் அந்நிலையில்! இருவரும் அன்பைப் பங்கிட்டுக் கொண்டதும் குப்பன் ஆரோக்யசாமியின்பால் கூற நினைத்த குதூகலச் செய்தியைக் கூறினன். அவன்—கேட்டுக்கும் மாளம்போட்டான்! "என்னமோ அப்பா! நீங்கள் நல்லா இருந்தால் அதுவே எங்களுக்குப் போதுமானது" என்று ஆரோக்யசாமியின் இறுதி வாக்யத்தைக் கேட்டுக் கொண்டே "நல்லது, எல்லா ஏற்பாடும் செய்து கொண்டு வருகிறேன்" என வெளியில் சென்ருன் குப்பன். மேரி அந்த மேலான நாளை ஆவலுடன் எதிர்பார்த்து—எண்ணுதை எண்ணமெல்லாம் எண்ணிவரும் போது........

அன்று "வாழ்க்கை ஒப்பந்தம்"—குப்பனுக்கும், மேரிக்கும் ஓரளவுக்கு நல்மணமாக நடந்தேறியது—பலர் சூழ! விருந்து என்று கூற ஒன்றுமில்லாவிட்டாலும் குப்பனுக்கு மட்டும் அந்த நல்விருந்தை, இன்ப உலகில் எவர் தயவும், தடையும் இன்றி என்றும் புசிக்க உரிமை பெற்றுவிட்டான்! இல்லை, இல்லை பெற்றுவிட்டார்கள்!! அன்று மாலையே அவன் அவளை அழைத்துச் சென்று அலுவல் பார்க்கும் ஏகாம்பரர் மாளிகையின் பின் அமைந்துள்ள குடிசையில் 'குடும்பம்' வைத்தான்! மணமக்களை ஏகாம்பரர் வாழ்த்தாவிட்டாலும் அவர்கள் கூடிவாழ குடிசையளித்

தும், பொருள் உதவி வழங்கி வருவது—இருவருக்கும் இன்பமளித்தது. தோட்ட வேலையும் காவலும் அந்த மாளிகையில் குப்பன் செய்து வரும்போது, மேரி வீட்டு வேலையும் பார்த்து விட்டு குப்பனுக்கு உதவியாக இருக்கும் நிலையிலே........

தேர்தல் காலம்! இரு பெரும் அமைப்புகளும், மற்றும் சிற்சில அமைப்புகளும் அல்லாமல் பல உதிரிகளும் அதில் பங்குகொண்டன—நாட்டை நல்ல பாதையில் நடத்திச் செல்ல! கடந்துவிட்ட நாளில் ஆண்ட பெருமை கூறி, அலங்காரமாக ஆட்சி பீடத்தை அலங்கரித்த அருமையாளர்களும் இந்த வரும் தேர்தலில் பங்குகொள்ள வேண்டி தேர்தல் சின்னமாக "குரங்குப் பிடி" பெட்டியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்! "தீப்பொறிச் சின்னத்தைப் புரட்சிவாதிகளும் தேர்ந்தெடுத்தனர்.

"குரங்குப் பிடி" சின்னத்தார் ஏகாம்பரர் வாழும் தொகுதியில் அவரையே அந்த அமைப்பின் "ஆடுதன் ராஜா"வாக்கி அவரைப் பங்குக்கொள்ள வேண்டினர்; ஏற்றுக் கொள்ளப்பட்டது. புரட்சிவாதிகள் தீப்பொறிச் சின்னத்தின் தூதுவராக அரசியலார் அடக்குமுறைக்கு அகப்படாமல் அந்த அமைப்பின் வேலைகளைத் தொடர்ந்து செய்து வரும் நல்ல தம்பியை ஏகாம்பரருக்குப் போட்டியாக நிறுத்தினர். இதில் வெற்றி தோல்விகள் கூறமுடியாத நிலையில் புதிய பாதையர்கள் கூட்டுறவு புரட்சிவாதிகளுக்கு உண்டாகிவிட்டது!—ஏகாம்பரருக்கு இருந்த நம்பிக்கையும் நாசமாகிவிட்டது; இருந்தும் முயற்சியும், பணமும் கொண்ட இரு தாக்குதலில் வாக்குப் பெற்றுள்ளோரைத் தாக்கி வாக்குகளை "குரங்குப் பிடி" சின்னப் பெட்டிக்குப் போடும்படியாகச் செய்து விடலாம் என்ற நப்பாசையில் அவர் நாளும் தேர்தல் அலுவல்களைக் கவனிக்கலானார். இரு சார்பு பிரச்சார பீரங்கிகளும் பெரும் பெரும் குண்டுகளை வீசலாயின! மற்றவர்களின் துப்பாக்கி வேட்டுகளும் இடை இடையில் பொழியப்பட்டு வாக்காளர்களைக் "காது செவிடு" செய்தன. மறுநாள் நடக்க இருக்கும் தேர்தலுக்கு அன்றே வாக்காளர்களை நேரில் கண்டுவர ஓயாது உழைத்தனர் — நல்லதம்பி மறைவாக இருக்கும் காரணத்தால், புரட்சிவாதிகளும், புதிய பாதையர்களும் "தீப்பொறிசின்னப் பெட்டியில் வாக்கை ஏன் போடவேண்டும்? என்பதற்கு விளக்கமும், வீரமும் வீசிடலாயினர்!

தேர்தல் முடிவடைந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன! அன்று வெற்றி, தோல்விகளை அறிவிக்கும் நாள்!! உதிரிகளையும், சில்லரைகள் பெட்டிகளையும் கணக்

மல்லிகையின் நறுமணத்தில்
மகிழ்வார் சில பேர்!

சிலருக்கு ரோஜாவின் மென்மையான
வாசம்தான் பிடிக்கும்!

இன்னும் சிலரோ மகிழம்பூவின் மணமே
மண மென்பார்

இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒவ்வொருவரும் தத்தமக்குப் பிடித்த மணத்தை அனுபவிக்க ஏதுவாகக் கதம்ப மாலை கட்டித் தருகிறான் பூக்காரன்.

பொன்னி

நாங்கள் உங்களுக்களிக்கும் இலக்கியக் கதம்பம்!

சுவையான சிறு கதைகள், நெஞ்சினிக்கும் கவிதைகள், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், அறிவுத் துணுக்குகள், அரசியல் விமரிசனங்கள் இவ்வளவும் பொன்னியில் இடம் பெறுகின்றன.

அதுமட்டுமா?

பொன்னி எல்லா அம்சங்களிலும் முற்போக்குக் கருத்துக்களையே தாங்கி வருகிறாள். எல்லா அம்சங்களிலும் புதுமைகளைப் படைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறாள்.

பொன்னி

ஒவ்வொருவர் வீட்டிலும் தவறாது இருக்கவேண்டும். ஏனென்றால், அது ஒரு அரசியல், இலக்கியப் பத்திரிகை மட்டுமல்ல,

உங்கள் குடும்பத் தோழியும் கூட.

உங்கள் பிரதிக்கு இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

கெடுத்தாகிவிட்டது! 'குரங்குப் பிடி'' சின்னப் பெட்டிகளின் வாக்குகளை எண்ணும் பங்கை ஏற்று எண்ணப்படுகிறது. வெளியில் நின்றிருக்கும் ஆயிரக்கணக் கானவர்களை ஆச்சரியத்திலும், ஆவல் காட்டும் நிலையிலும் ஆழ்த்திவிட்டது!...அதோ, ''குரங்குப்பிடி'' சின்னம், கொம்பருக்கு 25,000 வாக்கு வரையில் கிடைத்திருப்பதையும் அறிவிக்கப்படுகிறது! ஆனல், 'தீப்பொறி' சின்னம் நல்லதம்பிக்கு எத்தனை வாக்குகள்?........அது காத்து நின்ற மக்களுக்கு நம்பிக்கையளிக்க வில்லை! இருந்தும் இரவு பத்து மணிக்கு 'தீப்பொறி' சின்னம் நல்லதம்பிக்கு 27,000 வாக்குகள் கிடைக்கப்பெற்று நல்லதம்பி வெற்றி பெற்ருர் என்றதும் வெளியில் நின்றிருந்த மக்கள் ''வாழ்க நல்ல தம்பி'' ''வாழ்க புரட்சிப் பாதை'' ''வாழ்க புதிய பாதை'' யென்று வாழ்த்தொலி வழங்கி இரவு பத்து மணிக்கு ''ஊர்வலம்'' வந்தனர்; வெற்றிச் செய்தியைக் கேட்டு ஏகாம்பரரும் ''குரங்குப்பிடி'' சின்னத்தின் ஆதரவாளர்களும் இருக்கும் இடம் தெரியாமல் மறைந்து விட்டனர்!

நல்ல தம்பிக்கு இந்த நற் செய்தி தெரிந்திருக்குமோ; இருக்காதோ, மக்கள் மன்றம் மறைந்திருக்கும் நல்லதம்பி இனி நாட்டில் நடமாடவேண்டும் என்று முழங்கத்தொடங்கினர்.

ஏகாம்பரர்—தேர்தலுக்குப்பின் புதிய மனிதராக, எந்தவிதப் பொதுத்தொண்டிலும் பங்கு பெருமல் ஒதுங்கிவிட்டார்! மக்கள் அதைத் ''தோல்வியின் பாடம்'' அது அவரைப் பதுங்கிடச் செய்துவிட்டது, என எண்ணினர்கள்! இருந்தும் அவர் வெளி உலகில் நடமாடும் நிலைமையை ஓரளவுக்கு ஒதுக்கியே வைத்திருக்கிருர்! அது குப்பனுக்கு மட்டுமல்ல அந்த வீட்டில் உள்ளோருக்கே புரியாத புதிராக இருந்தது!

அன்று இரவு எட்டுமணியளவில் நான்கு போலீஸ் லாரிகள் ஏகாம்பரர் மாளிகையின் முன் வந்து நின்றன! அதில் இருந்து போலீஸ் படைகள் ஏகாம்பரர் மாளிகையின் நான்கு பக்கமும் சூழ்ந்துக் கொண்டனர்! ஒரு சிலர் உள்ளே நுழைந்து தேடி மாளிகையின் பின் அமைந்துள்ள குடிசையில் இருந்து குப்பனை வெளிக் கொண்டு வந்து கையில் விலங்கிட்டனர். இந்த



ஆசிரியர்: (சொல் வகைகளைக் கற்றுக்கொடுத்துவிட்டு, வளவனைப் பார்த்து) டேய் வளவா! முட்டாள் என்பது என்ன சொல்?

வளவன்: வசைச்சொல், ஸார்!

வேதனைக்காட்சி மேரியை ஒப்பாரி வைக்கத் தூண்டியது! இந்நிலையில் ஏகாம்பரரும் "என்ன இது?" என்று கேட்டுக்கொண்டே மாளிகையில் இருந்து வெளிவந்ததும், "நல்ல பாதுகாப்பிடமாகப் பார்த்துத்தான் சார் இவர், இருந்து இந்நாள் வரையில் தப்பி விட்டார். அதுமட்டுமல்ல. உங்க தயவிலே இருந்தே உங்களை எதிர்த்திருக்கிறது! இன்று ஆறு மணிக்குத்தான் சார் "தகவல்" எட்டியது! எங்கே அது இவருக்கு தெரிந்து கம்பி நீட்டிவிடப் போகிறாரோ என்று தகுந்த ஏற்பாடுடன் வர வேண்டியிருந்தது சார்!" என்று கூறியதும் ஏகாம்பரர் ஒன்றும் புரியாதவராய் "நம்ப பய 'என்ன குற்றம் செய்தான்?' என்று கேட்டார். இன்ஸ்பெக்டர் இவரு தாங்க நல்ல தம்பி' கடந்த நான்காண்டாகத் தலைமறைவா இருந்து புரட்சிக்குவித்தாக இருந்தவரு. இத்தனை நாள் பிடிபடாமல் இருந்த இவர்........" என்று கூறி வரும்போது குப்பன் மேரியை நோக்கி "மேரி! நீ உன்னுடைய தாய், தந்தையர் இடம் போய்ச்சிறிது நாள் இருந்து வா, நான் வந்ததும் உன்னை அழைத்துக்கொள்கிறேன்" என்றான். அவளோ, அழுதாளே அன்றி அதைக் கேட்டவளாக இல்லை!

அவனை லாரியில்........போட்டு அழைத்துச் சென்று ஜெயிலில் அடைத்துவிட்டார்கள்! மறுநாள் காலை ஊர் முழுதும் நல்லதம்பி பிடிப்பட்ட செய்தி அதுவும் ஏகாம்பரர் வீட்டிலேயே அந்நாள்

வரையில் பாதுகாப்பாக இருந்து வந்த விபரம் அனைத்தும் அறிந்த மக்கள் ஆச்சரியம் அடைந்தனர். அதே வேளை அடக்குமுறை முறையில் தாக்கப்பட்டு சிறை சென்ற "நல்லதம்பியை விடுதலை செய்" என்ற குரலையும் எழுப்பி வரலானார்கள்!

ஏகாம்பரர் எண்ணத்திலே....

நல்லதம்பி, அவன் கூலிக் குப்பனாக இருந்து, ஒரு எளியவன் போல் நடந்ததும், தோட்டக்காரனாக மாறியும்; இட்ட வேலையை இன்பமாகச் செய்து, உழைப்பை வழங்கி—உருவாக்கிடும் பலன்களை உண்டாக்கி வந்ததை அறிந்த அவர்; தன் சிந்தனையில் அவனின் ஒவ்வொரு செய்கையையும்—கண் முன் காட்சியில் கொண்டு வந்து சிர் தூக்கிச் சித்தம் குளிர்ந்தார்!....

அடக்கு முறையின் பிடி சிறிது வழிவிடுகிறது!—வழியின் மூலம் நல்லதம்பியை வெளியுலகில் நடமாடவிடுகிறது; நாடாளும் மன்றம்!—மக்களின் மாபெரும் குரலின் சக்தியாலோ....இரக்கத்தின் பாற்பட்டோ? .... அறியோம்! எதுவோ? .... நல்லதம்பி மட்டும் சுதந்திர உலகில் நடமாடும் உரிமை பெற்றான். நல்லதம்பியின் விடுதலைச் செய்தி காட்டுத் தீப்போல் பரவியது! அவனின் விடுதலை நாளை; நல்ல தேர் நாளாக்கிக் காட்டவும், தேர்தலில் வெற்றிகண்டதற்கு "வெற்றி விழா" கொண்டாடவுமாக அன்று மாலை கடற்கரையில் ஓர் மாபெரும் கூட்டத்தை 'புரட்சிப் பாதையர்கள்' கூட்ட அறிவித்திருந்தார்கள்.

அன்று, அந்தக் கூட்டத்திலே அடக்குமுறை [illegible]ரின் அழிவுப் பாதையை—மக்களுக்கு எடுத்துக்காட்டி, அந்தப் பாதையில் பரவச நடைபோடும் 'குரங்குப்பிடி' சின்னத்தாரைத் தோற்கடித்து நல்லதம்பியை நாடாளு மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களை வாழ்த்தி, மக்கள் வாழ்வுக்குவழி வகுத்துத் தொண்டு செய்ய — நல்லதம்பியை வேண்டிக் கொண்டு பேசும்படி அழைத்ததும்........

துன்பத்தில் துஞ்சியோரே!
துடித்தெழுவீர்! இன்பம் —
அனைவருக்கும் பொது!

அதனைப் பொதுவுடமையாக்கி 'எல்லோருக்கும், எல்லாம் இருப்பதான' இன்பபுரியை நமது நாட்டிலே....அதுவும் நமது காலத்திலே சமைத்திடத்தான் நாம் விரும்புகிறோம் என்று பேசினான்.

"வீணர்களின் காட்டுக் கூச்சலும், ஆட்சியாளர்களின் அடக்குமுறைத் தாக்குதலிலும் இருந்து நாம் தகுந்த பாதுகாவல்கொண்டு வாழவேண்டியவர்களாக இருக்கிறோம்! நாம் விரும்புகிறோம் — அனைவர் நல்வாழ்வுக்கும் வகை காண! அவர்களும் வாழவிரும்புகிறார்கள் அது அவர்களுக்குப் பின் பல தலைமுறை பரவச வாழ்வு பெற! நமக்கு நாட்டில் வாழ்வோர் குடும்பம்! அவர்க

இளைஞன்: ஐயோ! அம்மா, தேள் கொட்டி விட்டதே.

தாயார்: அதன்மேல் வெங் காயத்தைத் தடவுடா.

இளைஞன்: ஐயோ! தேள் அப் பொழுதே ஓடிப்போய் விட்டதே, அம்மா.

ளுக்கோ........அவர்களின் சந்ததி கள் குடும்பம்! கூறுங்கள் இப் பொழுது?—நாட்டின் நாசகாரர் கள் யார்?'' என்று பேசிவரும் வேளையிலே மக்களின் குரல் .... ''ஏகாம்பரர்'' ஏகாம்பரர் ஒழிக'' என்பதாக பலத்த கூச்சலைக் கண்டு நல்லதம்பி நான்கு பக்க மும் கண்வலை வீசித்தேடும்போது ஏகாம்பரரும், நாகரீக எழிலோ வியமும் அவரைப் பின்தொ டர்ந்து வருவதையறிந்து அவ ளாரோ? என்று நினைத்தவனாய் ஏகாம்பரரை எதிர்கொண்டு அழைக்க மேடையை விட்டுக் கீழ் நோக்கி ஓடினன்!

எழிலோவியம் அவன் அருகில் வரும்போது, அவள் அன்பு மனைவி மேரியாக இருப்பதைக் கண்டான். அவளின் புதுமை நிலை அது அவனுக்குப் புன்னகை யளிக்கவில்லை!—புரியாத புதி ராக இருக்கும் நிலையில் அவன் ஏகாம்பரர் இடம் சென்று ''வருக'' எனக் கையினைல் வரவு கூறவும், வரவு கூறிய நல்ல தம்பியை வாரிக்கட்டி அவன்பால் அன்புக்கண்ணீர் பொழிந்தார்!

இந்தப் புதுமைக் காட்சி—மக் ளுக்கு மகிழ்ச்சியை ஊட்டிவிட் டது! வான் கேட்கும் அளவுக்கு வாழ்த்தொலி எழுப்பும் வறுமை கொண்டோருக்குமேடை சென்ற தும், கூட்ட அமைப்பாளரிடம் அனுமதி பெற்று நற்செய்தியை கூறுகிறார் ஏகாம்பரர்....

அன்பர்களே! என்னைப் புதிய நிலைக்கு அழைத்து வந்தது— நல்லதம்பியின் நற்சேவை! என் ஒருவன் சுகமே பெரிது என்று எழில் வாழ்வு பெற்று எந்த ஏழை களை மறந்து அவர்களைச் சுரண்டி சுகவாழ்வு பெற்றேனே அதே ஏழைகளுக்கு....என் சொத்தை யெல்லாம் தருமம் செய்திடப் போவதில்லை! என் சொந்த நிலங் களை உழுபவனுக்கு உரிமை யாக்கி,........நிர்வாகங்களை அதில் அலுவல் செய்வோரின் 'பொது உடைமை'யாக்கி என் மோளி கையை மக்களுக்குச் சவை செய்வோரின் கூடமாக்கி, பணத் தால் பல பள்ளிகளைக்கண்டுபின் நிலையில் உள்ள மக்களுக்கு அறிவை வழங்க ஏற்பாடுசெய்து என்னை, மக்களுக்குத் தொண்டு

செய்ய நாளைமுதல் தயார்படுத்திக்கொண்டு பாடுபட உறுதி பூண்டுவிட்டேன்'' என்று ஏகாம்பரர் அறிவித்ததும் மக்களுக்கு ஆனந்தம் அளவு கடந்துவிட்டது!

ஏகாம்பரர் அறிவித்துவிட்டு மேடையைவிட்டுக் கீழ் வந்ததும் நல்லதம்பி தொடர்ந்து பேசலானுன். அதோ நமது ஏகாம்பரர் எழுச்சி பெற்றுவரும் ஏழைகளின் உள்ளம் புரட்சி பூக்கா முன் புதிய மனிதராக மாறிவிட்டார்! அவரை வரவேற்கும் அதே வேளையில் உணர மறுக்கும் உருவங்களுக்கு....

"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பராகிவிட்டால்
ஓர் நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர்
எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்
உணரப்பா நீ''

என்ற, புரட்சிக் கவிஞரின் கவிதையின் கருத்தை நாட்டிலே "காட்சிச்சாலை''யாக்கிக் காட்டுவோம்!

ஆதலால், அன்பழைப்பு விடுக்கிறேம், இனி நீங்கள் ஏகாம்பரராக மாறுங்கள் என்று! மாற மனமில்லையானல், மக்கள் மன்றத்தின் தீர்ப்புக்கு நீங்கள் உங்களைத் தயார்படுத்திக்கொள்ளுங்கள்'' எனக் கூறி தேர்தலில் வெற்றிகாண வாக்குகள் வழங்கியோர்....பாராட்டிப் பேசியவர்கள் புதிய பாதையில் நடக்க முன்வந்த ஏகாம்பரர் அனைவருக்கும் வாழ்த்தும், நன்றியும் கூறித் தன் பேச்சை முடித்துக்கொண்டான்.

மேடையை விட்டு அந்த மூவர்...........நல்லதம்பி, மேரி, ஏகாம்பரர் மணற் பரப்பில் மகிழ்ச்சி நடை போட்டுச் செல்வது காட்சிக்கோர் இன்பம்! களிப்பைத் தேடியலையும் ஏழைகள் உள்ளத்திற்கு அது உணர்ச்சி மழை! ஏகாம்பரர் காரில் மூவரும் பங்கு கொண்டதும் அது அவரின் மாளிகைக்கு அழைத்துசென்றது! காரைவிட்டு இறங்கியதும் நல்லதம்பியின் கால் மாளிகையின் பின் அமைந்துள்ள குடிசையை நோக்கி நடை போட்டது! அதைத் தடுத்து ஏகாம்பரர் மாளிகை உள்ளே நுழைய உத்தரவிட்டார். இல்லை: இல்லை. வேண்டிக்கொண்டார்! அந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டதும் அதுவரை ஏற்பாடாகியிருந்த விருந்தில் 'சமதர்மத்தில்' பங்குகொண்டு; பரவசம் பெற்றனர்; நல்விருந்தில் அவர்கள் நல்ல சுவை கண்டு, காற்று வாங்க மாடி செல்லும்போது மேரியையும், நல்லதம்பியையும் தனிமையில் விட்டு ஏகாம்பரர் விடை பெற்ருர்!

நாகரீக உலகம் மேரியை அழகுக்கு அழகு செய்யும் அணிகலத்தை பூண்டிடச்செய்து புதிய முகமாக நல்லதம்பியின் வசம் ஒப்புவித்தது! அவளின் புதிய 'மேக்கப்'பில் ஓர் இனிமையைக் கண்டான்! அவள் தலை சாய்வு கொண்டாள்!

"மேரி!''

அவன் குரலுக்கு அவள் பதில் குரல் எழுப்பாத.........எழுப்ப முடியாத ஆனந்தத்தில் அவஸ்தைப் படுவதையறிந்ததும்!.......தன் உதட்டின் வழியாக அவளின் உத(ட்)டைத்'திறப்பு விழா' செய்தான்!–தித்திப்பை மொண்டான்!!—உண்டான்!!! *

புதுமைப்பித்தன்

சிறுகதைப் போட்டி

பொன்னி அறிவித்திருந்த புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டியை எதிர்பாராத நிலையில் நடத்தமுடியாமல் போய்விட்டது. பொன்னிக்கு நேர்ந்த இன்னல்களை எழுத்தாள நண்பர்களும் வாசகர்களும் நன்கறிவர். புதிய பொன்னியின் வருகை அவர்களைப் பூரிக்கச் செய்திருக்கும் ஆதலால், போட்டியைக் கைவிட நேருவதை அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறோம்.

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டிக்காக ஏராளமான கதைகள் வந்துள்ளன. இளம் எழுத்தாளர்கள் பலர் ஆர்வத்துடன் கலந்து கொண்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் உளம்நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.

பல கதைகள் பரிசீலிக்கப்பட்டு விட்டன. இன்னும் பலப்பல பாக்கியிருக்கின்றன.

அவ்வப்போது கிடைக்கும் சிறந்த கதைகளைப் 'பொன்னி' யில் முறையாக வெளியிடுவதுடன் அவற்றிற்கு இயன்ற அளவு பரிசுப்பொருளும் கொடுத்து வருவது என்று முடிவு செய்திருக்கிறோம். அந்த முடிவின்படி இந்த இதழில் சொ. திருநாவுக்கரசன் அவர்கள் எழுதிய "மாறுதல்" என்னும் கதை இடம் பெறுகிறது.

இந்த முடிவை எல்லோரும் வரவேற்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம். என்றும்போல் குன்றாத ஆதரவும் ஆசியும் தந்து தமிழ் மக்கள் "பொன்னி"யை ஊக்குவிப்பார்கள் என்று நம்புகிறோம்.

வணக்கம்.

ஆசிரியர்.

எழுத்தாள

நண்பர்களுக்கு

பொன்னிக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்த கதைகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

புதிதாக வரும் கதைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு முடிவு செய்யப்படுகின்றன.

வெளியிடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும் கதைகள் பற்றித் தபால்மூலம் அறிவிக்கப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத கதைகள், அவற்றுடன் போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்பப் பட்டிருந்தால் மட்டுமே திருப்பி அனுப்பப்படும்.

கதைகள் சம்பந்தமாகக் கடிதங்கள் அனுப்ப வேண்டியதில்லை. அவை கவனிக்கப்படுவதில்லை.

தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றனரோ, அங்கங்குள்ள அவர்களின் வாழ்க்கை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் இனிய சிறு கதைகளைப் பொன்னி வரவேற்கிறாள். எளிய தமிழிலும், கூடுமானவரை பிறமொழிச் சொற்கள் கலவாமலும் இருக்கும் கதைகளையே பொன்னி விரும்புகிறாள்.

அரசியல், பொருளியல், கலை இயல், குடும்பவியல் முதலிய, வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் பிரதிபலிக்கும் புதுமைக் கதை, கவிதைகளை பொன்னி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வாள்.

எழுத்தாள நண்பர்களும் என்றும்போல் பொன்னியை ஆதரித்து வருவார்கள் என்று எதிர் பார்க்கிறோம்.

வணக்கம்.

ஆசிரியர்.

பழுத்தது மாலை! பெண்கள்
பாய்ந்தனர் ஏரி நோக்கி;
விழுந்தன மேனி நீரில்!
மிதந்தன மாந்த ளிர்கள்!
தொழுதது ஏரி! தங்கத்
தேர்களாய் நீந்தி மூழ்கி
உழுதனர்! உயிர்நி லாக்கள்
உமிழ்ந்தன தமிழ்ப் பாட்டுக்கள்!

அலைகளோ மார்பை மேயும்;
அல்லியோ முத்தம் கேட்கும்!
கொலையினுக் கஞ்சார் போலே
கிள்ளுவர் மொட்டைச் சின்ன
மலையெனக் குதிப்பர்; தோழி
மடியினை அவிழ்த்துத் தாவி
நிலைதனில் நில்லார்! அன்னை
நெடுந்தொலை உள்ளாள் அன்றோ?

உதைந்திடும் குதிங்கால், ரோஜா
உதிர்வது போலே! கைகள்
புதுப் புது நெளிவைச் செய்யும்
புதுமின்னல் புறப்பட் டாற்போல்
சிதறுவர் முகக் குப்பையை
சிரித்திடும் புனல்பூங் காட்டில்!
எதற்குமே அஞ்சார்! ஆனால்
இடைகளோ முணு முணுக்கும்!

மஞ்சள் ஒளி பெய்ய, ஏரி
மின்வெள் ளமாகும்! பெண்கள்
கொஞ்சிடும் வைர மீன்கள்!
கொத்துவர் நெஞ்சை! கொச்சி
மஞ்சளைத் தேய்ப்பர்! சேலை
மடியினைத் துவைத்துத் தோழி
கெஞ்சலுக் கிரங்கிச் சற்றே
குலவுவர் காதலன் போல்!

முடித்தனர் குளிப்பை! ஆல
விழுதினில் சேலை கட்டிப்
பிடித்தனர்; உலர்த்தத், தென்றல்
புரண்டது மேனி யெல்லாம்!
கடிந்தனர்; நாணமின்றிக்
கலைத்தது வனப்புக் கூட்டை
மடித்தனர் சேலை! பார்ப்போர்
மனதெலாம் மடிப்பார் போலே!

நடந்தனர் கையை வீசி!
நாற்புறம் ஒளிவீச்சுக்கள்
கொடுத்தன மயில்கள்! கூந்தல்
கொஞ்சுமே முதுகில்! சோலை
கடந்தனர்! வீணைப் பேச்சால்
கலைத்தனர் புறாக்கூட்டத்தை
உடைந்தன இதழ்கள்! எங்கும்
உதிர்ந்தன சிரிப்புப் பூக்கள்!

அன்று வானம் இருண்டு ஒரேயடியாகக் கறுத்துக் கிடந்தது. நீருண்ட மேகங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதி முழக்கம் செய்தன, "இதோ வருண தேவன் வந்துவிட்டார்! பராக்! பராக்!!" எனக் கட்டியம் கூறுவது போலிருந்தது. அடிக்கொரு தடவை மின்னல் வெட்டி வெட்டிப் படர்ந்ததானது, உயர்ந்த நடனக் கலையை லாகவமாகக் கையாளும் நடன மங்கையொருத்தியின் முகத்தில் கணந்தோறும் தோன்றி மறையும் 'பாவ' எழிலைப்போல் ரம்யமாகக் காட்சியளித்தது.

மணி ஆறு கூட ஆகவில்லை. அதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. வசுமதியின் வீட்டில், அன்று அவளும், அவள் கணவன் வாசுதேவனும், சீக்கிரமே சாப்பாட்டுக்கடையை முடித்துக் கொண்டு எட்டு அடிப்பதற்குள்ளாகவே படுத்துக்கொண்டனர். மேலும் வசுமதி நிறை கர்ப்பிணி.

வெளிக் கதவு, "தட, தட"வெனத் தட்டப்படுவதைக் கேட்டதுமே, வாசு, எழுந்து சென்று கதவைத் திறந்தான். கண்ணீரும் கம்பலையுமாக, ராதை, உள்ளே நுழையவும், வாசு, "யார்?ராதையா!" என்றதும் அப்

படியே சிலையாகச் சமைந்து விட்டான். வசுமதி படுக்கையை விட்டு எழுந்தோடி வந்தாள்.

ராதை "அக்கா! அக்கா!!" என அரற்றிக் கொண்டே, வசுமதியைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு "கோ" வெனக் கதறினாள்.

வாசுவின் மூளையில் மின்னல் மின்னியது. ராதா தம்பதிகளிடையே நேர்ந்த பூகம்பத்திற்குக் காரணம் அவனால் ஒருவிதமாக ஊகிக்க முடிந்தது. துயரம் உள்ளத்தில் பாருங்கல்லாய்க் கனக்க, பொங்கி வந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, தன்னறையை நாடினான். வசுமதி, ராதையை நெஞ்சோடு அணைத்து கொண்டு பக்கத்தறைக்கு இட்டுச் சென்றாள். இடியும், மின்னலுமாக இருந்த வானம் பொத்துக் கொண்டு, "கோ" வென மழை பெய்தது.

*

வசுமதியும், ராதையும் சகோதரிகள். ராதை கர்ப்பத்தில் மூன்று மாதப் பிண்டமாக வளரும் போதே, தந்தை காலமாகி விட்டார். தாயார், பிரசவித்த அறையிலேயே மரித்து விட்டாள். தயாளுவான அத்தையின் ஆதரவில் இருபெண்களும்,செல்வமாக வளர்ந்தனர். வசுமதி, கன்னிப் பருவத்தை அடைந்ததும்,அத்தை தன் ஒரே அருமந்த புத்திரனை வாசுவுக்கு அவளை மணஞ் செய்து வைத்து விட்டு, இவ்வுலக பந்தத்தை உதறித் தள்ளி விட்டு விண்ணுலகேகினாள், ராதைக்கு அப்போது வயது ஐந்து.

ராதைக்கு அக்காளும், அத்தானுமே, தாய் தந்தையாக இருந்தனர். வாசுவுக்கு ராதை மீது உயிர் என்றால் மிகையாது. வயது வளருவதோடுங்கூட அவ

ளுடைய சரளமான சுபாவமும், துடுக்குத்தனமும், வளர்ந்து வந்தன. மேலும், தன் அத்தானோடு, எப்பொழுது பார்த்தாலும், விளையாட்டுச் சண்டை போடுவதும், கோபித்துக் கொள்வதுமாக இருப்பாள். வாசுவுக்கும், அவளை ஒரு நாள் ஒரு பொழுதாவது கோபமூட்டி, அழ வைத்து, பின் சிரிக்க வைக்காவிடில் மனச் சமாதானம் ஏற்படாது. அவனுக்கு ஒரு தங்கை இருந்தால் கூட, அவன் அவள் மேல் அத்தனை பாசம் வைத்திருப்பானே என்னவோ!

பெரியவளான பிறகுங் கூட, இருவரின் சுபாவத்திலும் சிறிதும் மாறுதல் ஏற்படவில்லை "அத்தான்!" என்று அவள் கூப்பிட்டுக் கொண்டு குழந்தை போல் ஓடிவருவதைப் பார்த்து, பரவசமடைந்து போவான் வாசு. எது வாங்கி வந்தாலும், வசுமதி, ராதை, இருவருக்கும் பங்கு போட்டுத்தான் வாங்கி வருவான்.

ராதையின் கணவன் கோபாலன் வாசுவுக்கு ஒன்றுவிட்ட சகோதரன். அவனுடைய படிப்பு அந்தஸ்து, அழகு இவைகளைப் பார்த்து ராதை மயங்கினுள். ஆனுல், கோபாலனுடைய குண விசேஷங்கள் சில பழகிப்பார்த்த அளவில் வாசுவுக்குப் பிடிக்கவில்லை. "ராதையின், களங்கமற்ற சரள சுபாவத்திற்கும், கோபாலனின் சிடுசிடுத்த கபடமான சுபாவத்திற்கும், ஒத்துவர மாட்டாது" என அறிந்திருந்தும் ராதையின் விருப்பத்திற்கிணங்க அவளைக் கோபாலனுக்கு மணஞ் செய்து கொடுக்கவேண்டி வந்தது.

கோபாலனுக்கும், அதுவே சொந்த ஊர். உத்தியோகமும் அதே ஊரிலேயே ஆதலால், வாசு, வசுமதி இருவரும் தினமும் ஒரு தடவையாவது ராதை வீட்டிற்குப் போய், அவளைப் பார்த்தும் வேண்டியதை வாங்கிக் கொடுத்தும் வருவார்கள்.

ராதை, வாசுவைக் கண்டால், "அத்தான்!" என்று குழைந்தோடி வருவாள். வாசுவும், வாஞ்சையுடன் "ராதை!" என்றழைத்துக்கொண்டே, சர்வசாதாரணமாக வருவான், போவான். ஆபீஸிலிருந்து வரும் வழியில் ராதையின் வீட்டைத் தாண்டித்தான் தன் வீட்டிற்குப் போக வேண்டுமாதலால், வழக்கம் போல, வசுமதிக்கும், ராதைக்கும் பங்கு போட்டுக்கொண்டு வாங்கிவரும், பூவோ, பலகாரமோ, எதுவாயிருந்தாலும், கொடுத்துவிட்டு, சற்றுநேரம் ராதையோடு பேசிக்கொண்டிருந்துவிட்டுச் செல்வான். சில சமயங்களில், கோபாலன் இருப்பதும் உண்டு, இல்லாமல்போவதும் உண்டு.

ராதை, வாசுவின் களங்கமற்ற அன்பு, கோபாலனுக்கு வேறு விதமாகப்பட்டது. அவளை இல்லாத பொல்லாத கற்பனைகளைச் செய்யும்படித் தூண்டியது சந்தேக சைத்தான்.

சந்தேகம் என்ற மூடுபனி கோபாலனின் கண்களை மூடிவிட்டதால் அவன் வெகு சீக்கிரத்திலேயே காரண காரியங்களை ஆராய்ந்து பார்க்கும் அறிவையும் இழந்துவிட்டான்.

கோபாலன் ராதையைச் சொல்லம்புகளால் துளைத்து எடுத்தான். ராதை, வாசு வீடு

போய் வருவதைக் கண்டித்து நிறுத்தினான். பிறகு, வாசு வந்து போவதைப்பற்றிக் குத்தலாகப் பேச ஆரம்பித்தான். ராதையின் உள்ளத்தில் கலவரம் மூண்டது. "களங்கமற்ற அன்புக்கு இதுவா பரிசு?" என்று மனதிற்குள்ளாகவே பொருமினாள். சூதுவாது அறியாத வாசு எப்போதும் போல வந்து போய்க்கொண்டிருந்தான்.

"பெற்ற தந்தையினும், உடன்பிறந்த சகோதரனிலும், மேம்பட்ட வாசுவை, வராதே!" என்று சொல்ல அவளால் எப்படி முடியும்? கோபாலனின் மன இயல்பு அவளுக்குத் தாங்கொணாத அருவருப்பையும், வருத்தத்தையும் அளித்தது. அக்காளிடம் கூறலாமென்றாலோ, அப்பேச்சை எடுக்கவே நாக்கூசியது.

நாட்கள் ஓடின. கோபாலனைப் பிடித்திருந்த சந்தேக சைத்தான், நாளுக்கு நாள் விதவிதமான கற்பனைகளை எழுப்பியவண்ணம் இருந்தது. "மனைவி தனக்குத் துரோகம் செய்கிறாள்," என்று முடிவு கட்டியவனாய், அவளைச் சித்திரவதை செய்தான். ஆனால், வாசுவின் வரத்துப்போக்கைத் தடைசெய்ய ஏனோ அவனால் முடியவில்லை.

ராதைக்கும், சக்தியில்லை. "கடவுளே! எங்கள் இதயத் தூய்மையை நீதான் நிரூபிக்க வேண்டும்" என்று முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

ஒருநாள், வழக்கம்போல, வாசு "ஆபீஸ் காண்டீனி" லிருந்து ராதைக்கும், வசுமதிக்கும் பங்குபோட்டுத் தித்திப்புப் பண்டங்கள் வாங்கி வந்தான். பொட்டலத்தைக் கொடுப்பதற்காக ராதையின் வீட்டிற்குள் நுழைந்தவன், கோபாலனின், கோபக் குரலைக்கேட்டு, நடையிலேயே தயங்கி நின்றுவிட்டான். ஆயிரம் இடிகள் இடித்து அவன் தலையின்மீதே நேராக வந்து விழுந்ததுபோலிருந்தது. கோபாலனின் விஷந்தோய்ந்த சொற்கள்.

"ராதை! ஏன் ஒருமாதிரியாக இருக்கிறாய்? உன் ஆசை அத்தானுடன் அந்தரங்கம்பேசும் வேளையில், ஏதடா, இவன் சனியன் போல, அரை நேரம் லீவ் எடுத்துக்கொண்டு வந்துவிட்டானென்றா! இல்லையா?" கோபாலனின் குரலில் வெறுப்பும், குரோதமும் குமிழியிட்டன. ராதை மௌனமாக இருந்தாள். கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன சொற்கள்.

"பிறன் மனைவி என்றுகூடப் பாராமல், "ராதை! ராதை!" என்று உன்னைச் சதா சுற்றித் திரிகிறானே! அப்பொழுதே தெரியவில்லையா உங்களிருவருக்கும்.........." ராதை சட்டென்று அவன் வாயைப் பொத்தினாள். அவள் துடுக்குத்தனமான வாய் வார்த்தைகளைக் கொட்டிவிட்டது. "உங்கள் வாயைக் கழுவிக் கொண்டு வாருங்கள். அத்தானைப்பற்றிப் பேசக்கூட உங்களுக்கு யோக்யதை இல்லை........ நாக்கு அழுகிப்போய்விடும்...."

"பளார்!" என்று ஒரு அறை. அதைத் தொடர்ந்து "சீ! விபச்சாரி உனக்குவாய் ஒரு கேடா!" என்று கத்தினான். அதற்குப் பிறகுநடந்த சம்பவங்களை அறிய வாசு அங்கே இருந்தால்தானே! வந்த சுவடு தெரியாமல் நழுவி விட்டான். ராதையின் கன்னத்

தில் விழுந்த அடி, வாசுவுக்குத் தன் உள்ளத்தில் யாரோ சம்மட்டி கொண்டு தாக்கியதுபோலிருந் தது.

வசுமதியிடம் இரண்டு பொட்டலங்களையும் கொடுத்து, அவன் கண்கலங்க நிகழ்ந்ததைக் கூறிய போது, வசுமதி அழுதேவிட்டாள் சில நாட்களாகவே, ராதையிடம் ஏற்பட்டிருந்த மாறுதல்களுக்குக் காரணம், அத் தம்பதிகளுக்கு, அப்போழுதுதான் புலனுயிற்று.

அன்றிலிருந்து, வாசும் வசுமதியும் ராதையின் அகம்போய் வருவதை அறவே நிறுத்திக் கொண்டனர். வாசுவும் கோபாலனும் எங்காவது வெளியில் சந்தித்துக் கொண்டாலும் கூடப் பாராதவர்கள் போல முகத்தை திருப்பிக் கொண்டார்கள்.

* * *

'' அக்கா! அக்கா! என்னுல் இனிமேல் அரைநொடி கூட அவருடன் இருந்து வாழ முடியாது போலிருக்கிறதக்கா!'' கேட்கத்தகாத வார்த்தைகளையெல்லாம் கேட்டேன். பொறுத்துக்கொண்டேன். பொறுக்க முடியாத அடிகளையெல்லாம் பொறுத்துக்கொண்டு சகித்துப் போனேன்..... ஆனுல்.....இன்று.... இன்று........

''ராதை அக்காவின் மடியில் தலையைப் புதைத்துக் கொண்டு நெஞ்சு வெடிக்கப் புலம்பினுள். வசுமதிக்கு அவளை எப்படிச் சமாதானம் செய்வது,'' என்றே புலப்படவில்லை. ஏனெனில் அவளே தான் விம்மி, விம்மி, அழுது கொண்டிருந்தாளே!

''போனதெல்லாம் போகட்டும். இன்று என்னதான் நடந்தது சொல் ராதை!'' வசுமதி அவள் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்தாள். அழுததில் ராதையின் நெஞ்சுப் பாரம் சிறிது குறைந்திருந்தது.

அவள் நடந்த விஷயங்களை ஒன்று விடாமல் கூறிப் பிறகு, ''உன் ஆசை அத்தானிடமே, போய்விடு'' என்று வெளியே தள்ளித் தாழ்ப்போட்டுக் கொண்டதையும் சொல்லி, மறுபடியும் விம்மி விம்மி அழுதாள். வசுமதியால் பேசவே முடியவில்லை. துயரம் நெஞ்சில் நிரம்பி வழியும் போது, எப்படிப் பேச முடியும்!

''மனைவியை சதா சந்தேகக் கண் கொண்டு கண் காணிக்கும், கணவனுடன் இருந்து வாழ்வதை விட, கரடி, புலி வாழும்காடுநன்று அன்ருே!'' வசுமதியின் வெப்பமான பெருமூச்சுடன் கலந்து வந்தன இந்தச் சொற்கள். ''சந்தேகம் சர்வ நாசத்தைதான் தரும்'' இவையாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த, வாசுவின் நெஞ்சிலிருந்து உதிரம் கொட்டியது. ''தூய்மையான அன்புக்கு இதுவா பரிசு!'' கடவுளே! நீதான் பார்க்கவேண்டும்!

* * *

ராதா தம்பதிகளின் கலகத்திற்குக் காரணம் இதுதான்:

அன்று மாலை ஆபீஸிலிருந்து வீடு திரும்பும் போது, எப்போதும் போல வாசு ராதையின் வீட்டுப் பக்கமாக வந்து கொண்டிருந்தான். ராதை, தெரு வாயிற்படியில் நின்று கொண்டு பூ வாங்கிக் கொண்டிருந்தாள், ராதையை நேருக்கு நேராகச் சந்தித்த வாசு தடை கட்டிய நாகம்போல நின்று விட்டான். ''ராதை! சௌக்கியமா?'' ராதை அத்தானைப் பார்த்ததும், பரவசத்திலாழ்ந்து விட்

டாள், வாடி வதங்கிய செடிக்குத் தண்ணீர் ஊற்றியதும், எப்படி வாட்டம் நீங்கிப் பசுமையுடனும், பொலிவுடனும் காட்சியளிக்கிறதோ, அதுபோல வாசுவின் அன்புக் குரல் அவளது வாடிய முகத்தை மலரச் செய்தது.

ராதையின் பதிலை எதிர்பாராமலேயே, மேலே நடந்தான். ராதையின் கண்கள் கலங்கி விட்டன. அவன் போவதைப் பார்த்துக்கொண்டே, நின்று விட்டாள், பூக்காரி, சில்லரையைக்கொடுத்த போதுதான் அவளுக்குச் சுய நினைவு வந்தது. "அன்றும் அரை நேரம் லீவ் போட்டுவிட்டு வீட்டிலிருந்த கோபாலன், எங்கே இதைப் பார்த்து விட்டானோ!" என்ற அச்சம் அவளை உலுக்கி எடுத்தது. உள்ளே திரும்பினாள். கோபாலன் அனல் பொறி பறக்கும் கண்களால் அவளைச் சுட்டெரிப்பதுபோல பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளுடைய மனமறிய அவள் ஒரு குற்றமும் செய்யவில்லை, ஆனால் கோபாலன்தான் வாசு, ராதாவின் பவித்திரமான அன்பிற்கிடையே களங்கச் சுவரை எழுப்பி இன்பமயமான குடும்ப வாழ்வைத் துன்பமயமாக அடித்துக் கொண்டிருந்தானே!

ராதாவின் உடலெல்லாம் புயற்காற்றிலகப்பட்ட இளந்தளிரென ஒடுங்கியது. அவளுடைய மருண்ட விழிகள், அவளைக் குற்றவாளியாக எடுத்துக் காட்டின.

கோபாலன் எரிமலையாகக் குமுறினான். வசை மொழிகளை அக்கினிக் குழம்பாகக் கக்கினான். மாலையில் பிடித்த சண்டை அவளைக் கழுத்தைப் பிடித்து நெட்டி வெளியே தள்ளிய பிறகுதான் ஓய்ந்தது.

* * *

வாசு ஒரு திடமான தீர்மானத்துடன் எழுந்தான். விம்மிக் கொண்டிருந்த ராதையைக் கருணையுடன் நோக்கினான். ராதை முகத்தை மூடிக் கொண்டு "கோ" வெனக்கதறினாள். பொங்கி வந்த அழுகையை உதட்டைக் கடித்து உள்ளே அமுக்கிக் கொண்டு, வாசு "வசுமதி! ராதையை அழைத்துக் கொண்டு சென்று அவள் வீட்டில் விட்டு விட்டு, நீயும் அங்கேயே இரவு தங்கியிருந்து விட்டு வா. போ," என்றான்.

ராதை அத்தானைப் பரிதாபமாகப் பார்த்தாள். "நீங்களே புகலிடம் அளிக்காவிடில் எனக்குப் போக்கிடம் ஏது?" என்பது போல இருந்தது அவளுடைய பார்வை.

"ராதை! நீ வசுமதியின் உடன் பிறந்த தங்கை. நீ என்னுயிரினுமினிய தங்கை. கோபாலன் என்ன வேணுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும். ஆனால் வாசுவின் தொண்டை அடைத்துக் கொண்டது.

"ராதை! அழாதேம்மா அழாதே! நீ கண்ணீர் விடுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது. வாழ்க்கை வாழ்வதற்கே; அழுது, செத்து மடிவதற்கல்லம்மா! வாழ்க்கைப் படகு எப்போதுமே, அமைதியாக, ஆனந்தக் கடலில் மிதந்து செல்ல முடியுமா, பயங்கரமான புயல், கோரமான சூறாவளிக் காற்றுக் கெல்லாம், ஈடு கொடுத்துத்தான் தன் லட்சிய எல்லையைக் குறிவைத்து அது

முன்னேற வேண்டும். பட கோட்டி கெட்டிக்காரனுக இருந்தால் ஓட்டைப்படகைக் கூட பத்திரமாகக் கரை சேர்த்து விடமுடியும்.'' உணர்ச்சிப் பெருக்கால் வாசுவின் தொண்டை கரகரத்தது.

"குடும்ப வாழ்வு எனும் படகைச் செலுத்துபவள் மனைவி. தர்மத்தினின்றும் கடமையினின்றும், அணுவளவும் பிசகாமல், கடும் புயலுக்கும், சூறுவளிக்கும் ஈடுகொடுத்து நடத்துவது அவள் கையில்தான் இருக்கிறது. மனைவியே குடும்ப விளக்கு. அற்ப விஷயங்களுக்கெல்லாம் மனந் தளரக்கூடாது. பெண்களுக்கு கணவனுடன் வாழ்வதுதான் அழகு தரும் போம்மா.

வசுமதி, குறுக்கிட்டுக் கோபத்துடன், "நான் அவளை அனுப்ப முடியாது,'' என்ருள்.

"வசு, உணர்ச்சிக்கு இடங் கொடுக்காதே. என் நெஞ்சு என்ன பாடு படுகிறதென்பதை நீயறியாய். ஆனல்....ராதையை அடிக்கவோ, அணைக்கவோ கோபாலனுக்கு உரிமை இருக்கிறது. நமக்கு ஒருவேளை, ஒரு பொழுது, இங்கே தங்கவைக்க உரிமை ஏது? உம்....கோபாலன் ஆத்திரக்காரன். ஆத்திரத்தில் பகுத்தறிவுக்கு இடமில்லை. ஆய்ந்தோய்ந்து பார்க்கும் சக்தியும் குறைவு. ஏதாவது ஏடாகூடமாகப் போலீஸில் சென்று.......

ராதை ஆவேசங் கொண்டவள் போல் எழுந்தாள். "அக்கா! அத்தான்! நான் போய் வருகிறேன்!'' எனக் கூறிக்கொண்டே வில்லில் இருந்து விடுபட்ட அம்பு போல, வாயிற் கதவைத் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தாள்.

வாசு சிலையாக நின்றுவிட்டான். வசுமதி, "ராதை! ராதை!'' என்று கூப்பிட்டுக்கொண்டே, பின்னுலேயே ஓடிவந்தாள். கொட்டும் மழையில், இருளில் ராதை திரும்பிப்பாரமல் விரைந்தாள்.

* * *

வீட்டை நெருங்க, நெருங்க, ராதை நெஞ்சு வெகு வேகமாக அடித்துக் கொண்டது. உள்ளக் கடல் குமுறி எண்ண அலைகளை வாரி இறைத்தது, "அத்தான் சொன்னதுபோல அவர், செய்திருந்தால்........ அவள் உடல் நடுங்கியது........ உயிர் துடித்தது. "கதவைத் திறக்காவிட்டால்.... என்ன செய்வேன்........!'' அங்கேயே

விழுந்து கிடப்பேன்........ சற்று முன் வாய் அவளுக்குச் செய்த உபதேசம் அப்போதும் அவள் காதில் கணீரென்று ஒலித்துக் கொண்டிருந்தது.

கதவின் மேல் கை வைத்ததுமே, கதவு திறந்து கொண்டது. அவளுக்கு உயிரும் வந்தது.

உள்ளே நுழைந்ததும், கதவைத் தாழ்ப்பாள் போடக் கூட மறந்தவளாய்க் கோபலனை அவன் அளிக்கும் பரிசை எதிர் பார்த்து துணிவுடன் நின்றாள். ஆனால் கோபாலன் அங்கே இருந்தால்தானே, நிமிடங்கள் யுகமாகக் கழிந்தன. கோபாலனைக் காணோம். ஈர உடையைக் கூட அவிழ்க்காமல் வீடு பூராவும் தேடினாள்.

"அத்தான் சொன்னதுபோல ஒருவேளை............" ராதை செயலற்று, சிந்தனையற்று, திகில் பிடித்தவள்போல தரையிலேயே உட்கார்ந்து விட்டாள்.

கோபாலன் மெதுவாக பூனை போல உள்ளே நுழைந்ததை ராதை கவனிக்கவில்லை. கவனிக்கத்தான் சிந்தை எது?"

"ராதை!"

திடுக்கிட்டுத் திரும்பினாள் ராதை. அவளைப்போல, அவனும் ஈரம் சொட்டச் சொட்ட நின்று கொண்டிருந்தான். அவள் அழவில்லை, விம்மவில்லை, கண் கொட்டாது நோக்கினாள். கோபாலன் முகத்தைக் கீழே தாழ்த்திக் கொண்டு நின்றான். அவள் முகத்தை நோக்க வெட்கமாயிருந்ததோ, என்னவோ! "நீங்கள்.... நீங்கள்... எங்கே சென்றிருந்தீர்கள்..." ராதையின் குரல் நடுங்கியது.

கோபாலன் ராதையின் அருகில் நெருங்கி, அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, "ராதை! என்னை மன்னித்து விடு.... ஆத்திரத்தில் நான் அறிவை இழந்துவிட்டேன்," என்றான் தழுதழுத்த குரலில்.

ராதையால் தன் உணர்ச்சிகளை, அடக்க முடியவில்லை. அவனை இறுகச்சேர்த்துக் கட்டிக் கொண்டாள். "நீங்களே என்னை வெளியே பிடித்துத் தள்ளிவிட்டால், எனக்கு வேறு புகலிடம் ஏது? போக்கிடம் ஏது? ராதை கதறிவிட்டாள்.

"ராதை! என் உள்ளத்திலுள்ள மாசு நீங்கி விட்டது. அழாதே! எங்கே, என்னைப் பார். உன் அக்காள் சொன்னதைப் போல "சந்தேகம் சர்வநாசந்தான் தரும்." ஆத்திரத்தில் நான் பகுத்தறிவை இழந்து விட்டேன். போகட்டும் நடந்த விஷயங்களையெல்லாம், கெட்ட சொர்ப்பனம் போல மறந்துவிடு. இனிமேல் நாம் மறுபிறவி எடுத்தவர்கள் போல் வாழ்வோம்........

ராதை பரக்கப் பரக்க விழித்தாள். "ராதை! களங்கமற்ற உங்கள் மேல் களங்கத்தைச் சுமத்திய நான்........... ராதை அவன் வாயை மூடினாள். அவள் உள்ளம் ஆனந்தத்தால் விம்மியது கோபாலன் தன் பின்னாலேயே வந்து எல்லாவற்றையும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறான் என்று அவன் சொல்லியா அவள் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படியோ அவன் உள்ளத்தில் படிந்திருந்த மாசு நீங்கியது. அவள் வாழ்வில் படிந்திருந்த துன்பப் பனி விலகியது.

*

Edited, Printed & Published by Anu. Periyannan for Ponni Ltd., at Ponni Achakam, 111, Coral Merchant Street, Madras-1.

Telegram : "VATCORPOR" Phone : 4865

வாட்ஸன் கார்ப்பரேஷன்

தபாற்பெட்டி எண் 1221

117, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

நாங்கள் கீழ்க்கண்ட பொருள்களை ஏற்றுமதி செய்கிறோம் :—

மஞ்சள், புளி, மிளகு, கடுக்காய், சுக்கு. ஏலக்காய், சென்னா இலை, எட்டிக்காய், இலவம்பஞ்சு, சந்தனத்தைலம், சந்தன மரம், மரம்.

இது விஷயமாக வியாபாரிகள், உற்பத்தியாளர்கள் முதலியோர் தங்கள் சரக்குகளை எங்களுக்குத் தெரியப்படுத்தக் கோருகிறோம்.

நாங்கள் நூல்சாயம், நூல், கெமிகல் வகைகள் இறக்குமதி செய்கிறோம்.

---

* தமிழ்
* தெலுங்கு
* ஆங்கிலம்

டைப்புகள் — பார்டர்கள்

இன்னும் அச்சுவேலை சம்பந்தப்பட்ட எல்லாவித சாமான்களும், உயர்ந்த மெட்டலில் குறித்த காலத்தில் குறைந்த விலையில் கொடுக்கப்படும்.

●

கோபாலகிருஷ்ணா டைப் பவுண்டரி

6, பண்டாரம் தெரு,

புரசைவாக்கம் : : சென்னை -7.

அச்சுத் தொழில் வளருகிறது. எதையும் அச்சிலேற்றி அழகு காணும் நாள் இது. எனவே அச்சகங்களிலே வேலைகளை முடித்துக் கொடுப்பதில் நெருக்கடி ஏற்படுகிறது. என்றாலும் வாடிக்கைக்காரர்களுக்குக் குறித்த தவணையில் கலைப்பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம்!

★

பொன்னி அச்சகம்

111, பவழக்காரத் தெரு, சென்னை-1,